நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 02 பிப்ரவரி-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911

மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A.,	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS	துணைத் தலைவர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	உறுப்பினர்
திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. க.சி.அகமுடைநம்பி B.E.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L.,	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. பெ.சந்திரசேகரன்	உறுப்பினர்

செந்தமிழ்க் கல்லூரிக்குழு

திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்		தலைவர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,		செயலாளர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,		உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)		உறுப்பினர்
திரு. ச.தசரதராமன் B.A.,B.L.,		உறுப்பினர்
திரு. து.மாயராசன் B.Sc., B.L.,		உறுப்பினர்
திரு. இரா.ஜெகனாதன் B.E.,		உறுப்பினர்
திரு. லெ.சிவக்குமார் B.E.,		உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc.,		உறுப்பினர்
திரு. கி.ராஜாராம் M.B.A.,		உறுப்பினர்
முனைவர் க.பாலகிருஷ்ணன்	பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர் சு.விஜயன்		உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா		உறுப்பினர்

பொருளடக்கம்

1. நூலாராய்ச்சி — 6
பொன்.பாண்டித்துரைத்தேவர்

2. அன்மொழித்தொகைப் பொருண்மேல்வரும் ஆகுபெயர் — 12
சி.கணேசையர்

3. தமிழ்ச் சங்கமும் ஈழநாடும் — 14
ஆ.முத்துத் தம்பிப் பிள்ளை

4. சங்க இலக்கிய அக மரபுகளும் காளிதாசரின் இருது சம்ஹாரமும் - ஒப்பீடு — 19
முனைவர் உ.கருப்பத்தேவன்

5. பக்தி இலக்கியத்தில் மகளிர் — 34
முனைவர் சு.மலர்விழி
சென்ற இதழின் தொடர்ச்சி

6. திரு.வி.க.வின் தமிழ்க்கொடை ஈடு இணையற்றது — 39
தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன்

7. சங்கச் செய்திகள் — 41

இதழ் மணம்

முன்பாண்டித் துரைமகராற் றமிழ்ச்சங்கம் வளர்ந்ததெனு
மொழிமாறாதிம்
மன்பாண்டித் துரையளியால் வளர்கின்ற தெனவுலகோர்
மகிழ்ச்சி கூர
நன்பாண்டித் தலைநகரா மாமதுரா புரிவளரிந் நான்காஞ் சங்கத்
தின்பாண்ட வொருநான்காம் வருடவிழ வினுக்கியைந்த
வேற்றமென்னே.

– கந்தசாமிக் கவிராயர்

செந்தமிழில் பாண்டித்துரைத்தேவர் "நூலாராய்ச்சி" என்னும் தலைப்பில் கம்பராமாயணப் பாடல் ஒன்றினை எடுத்து விளக்கியுள்ள கட்டுரை இடம்பெறுகிறது. பாண்டித்துரைத்தேவர் அரசகுடும்பத்தைச் சேர்ந்தவர், புரவலர் என்று பெரும்பான்மையும் அறியப்பட்டவர். ஆனால் அவர் ஒரு சிறந்த கல்வியாளர். பதசாரம் சொல்லும் திறமையை நோக்கின் அவருடைய மொழிநூல் புலமையும் சொற்களை விளக்கியுரைக்கும் வன்மையும் அவருடைய சொற்பொருள் சார்ந்த ஆய்வு (Semantics) நுட்பமும் வெளிப்படும்.

அவர் கம்பராமாயணம், திருக்குறள் போன்ற நூல்களின் திட்ப நுட்பங்களை அறிஞர் பெருமக்களோடு ஒன்றியிருந்து பயின்றவர். அவருடைய அரசவையை உ.வே.சாமிநாதையர், யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் போன்ற சொல்லின் செல்வர்கள் அணி செய்தார்கள். அத்தகைய சான்றோர் தொடர்போடு அவருடைய தந்தையார் பொன்னுச்சாமித்தேவர் சிறந்த நூற்பயிற்சியுடையவர். பாண்டித்துரைத் தேவர் கருவிலே திருவுடையார். இளம் வயதிலேயே கவிபாடும் புலமைச் செருக்கும் உடையவர்; காவடிச்சிந்து பாடிய இருபெரும் புலவருள் இவர் ஒருவர். இவருடைய கம்பராமாயணம், திருக்குறள் சொற்பொழிவைக் கேட்க மக்கள் பெருந்திரளாகக் கூடுவது வழக்கம். பெருமகனாரது நூலாராய்ச்சி என்னும் கட்டுரை படித்து இன்புறத்தக்கது.

சி.கணேசையர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழ்ச் சான்றோர். "அன்மொழித்தொகைப் பொருள்மேல் வரும் ஆகுபெயர்", என்னும் தலைப்பில் எழுதியுள்ள கட்டுரை பரிமேலழகருடைய உரைத்திறத்தை

எடுத்துரைக்கும் நுட்பமுடையது. இலக்கண திட்ப நுட்பங்களை அறிதோரும் இன்பம் தரும். இக்கட்டுரையும் பலமுறைப் படித்து இன்புறத் தக்கது.

"தமிழ்ச் சங்கமும் ஈழநாடும்" என்னும் ஆ.முத்துத் தம்பிப் பிள்ளையின் கட்டுரை தமிழ் வரலாறு என்பது ஈழநாட்டோடு பின்னிப் பிணைந்தது. ஈழவரலாறும் தமிழ் வரலாறும் பிரிக்க முடியாத ஒருமை உடையது என்பதை வரலாற்றுப் பின்புலத்தோடு அறிஞர் ஆ.முத்துத் தம்பிப் பிள்ளை விளக்கி இருப்பது தமிழ் மாணவர்கள் நினைவில் வைத்துச் சிந்தித்தற்குரிய செய்தியாகும்.

முனைவர் உ.கருப்பத்தேவன் எழுதிய "சங்க இலக்கிய அகமரபுகளும் காளிதாசரின் இருதுசம்ஹாரமும் - ஒப்பீடு" என்னும் கட்டுரை இடம்பெறுகிறது. அரிதின் முயன்று பேராசிரியர் காளிதாசனையும் சங்க இலக்கிய மரபுகளையும் ஒப்பீடு செய்திருக்கிறார். வடமொழியும் தமிழும் பண்டைக்காலம் தொட்டு தொடர்புடையதென்பதும் அறிஞர்கள் இருமொழிப் புலமையும் தமிழ் மொழியையும் வடமொழியையும் கற்றுத் துறை யோகியவர்கள் என்பதும், பரந்துபட்ட பரதகண்டத்தில் உள்ள மக்கள் இலக்கியத் தொடர்பும் பண்பாட்டு ஒழுகலாறுகளும் நெருக்கமான உறவுடைய தென்பதையும் கட்டுரை எடுத்துரைப்பது மேலும் ஆய்வுக்கும் தேடலுக்கும் உரியதாகும்.

மயங்காதே தமிழா!

நல்லவனாய் வல்லவனாய் நன்றாய் நடிப்பவனை
எல்லாம் தெரிந்தவனாய் எண்ணி மயங்கிடாதே!
மீளா வறுமையில் மூங்கிக் கிடக்கிறாயே!
மீளாயோ தீந்தமிழா? மேன்மைபெற வேண்டாமோ?

நூலாராய்ச்சி

பொன். பாண்டித்துரைத்தேவர்

உலகில் வழங்கும் பாஷைகள் பல. அவ்வப்பாஷைக்குரியராகப் பல சான்றோர் பற்பல காலங்களில் தோன்றிக் கடவுளின்திரு வருட்பேறுடையராய்த் தந்நுண்ணறிவின் பயனாய நூல்களியற்றி அதனால் அப்பாஷைக்கும் தமக்கும் மிக்க சிறப்புண்டாக்கி யுள்ளாரென்பது யாவரும் நன்கறிந்ததேயாம். அவராலியற்றப்பட்ட நூல்கள் பல்வகை நயங்களும் பொருந்தி நீண்டகாலமாய்ப் பல்லோராலும் புகழ்ந்து பாராட்டப்படுகின்றன. அந்நூல்களே "நவில்தொறும் நூனயம்போலும்" என்னும் வாக்கிற்கிலக்கியமாய்ப் பலமுறையாராயப்புகினும் ஒவ்வொரு முறையினும் புதியபுதிய விஷயங்களை அறிதற்கிடனாயுள்ளன. இவ்வாறாய சிறந்த மொழிகளுள் நம் தமிழ் மொழியும் ஒன்றே. இம் மொழிக்குரியருள் எண்ணில் பல சான்றோர்கள் அவ்வப்போதவதரித்துச் சிறிய பெரிய நூல்கள் பல இயற்றி நம் தமிழ்மொழியை வளப்படுத்தியுள்ளார். அந்நூல்களுட் சிலவற்றையேனும் பலகால் நுணுகியறிப்புகுங் கருமத்தை மேற்கோடற்கு நம் ஆயுட்பிரமாணம் பற்றாததாகும். ஆயினும் அச் சான்றோர்களது நூற்பொருள் ஆராய்ச்சியில் மனத்திற்குண்டாம் இன்பம்போல் இவ்வுலகில் வேறெக்கருமத்தினும் உண்டாவதில்லை யென்பது கற்றோர்களது அநுபவசித்தமே. இவ்வகையாய நூலாராய்ச்சியையும் ஓர் விஷயமாகத் தம்முட்கொண்டு நம் "செந்தமிழ்" விளங்கவேண்டு மெனவும் அவ் விஷயதானஞ் செய்பவருள் யானும் ஒருவனாயிருத்தல் வேண்டுமெனவும் சில வித்துவான்களும் எனது நண்பருட்சிலரும் - விரும்பியதனால் மிக்க கல்விமான்களால் இயற்றற்குரிய இவ்வரும்பெருஞ்செயற்குச் சிற்றறிவினனாய யான் அவராணையை மறுத்தற்கஞ்சி ஒருப்பட்டேன்.

சான்றோர் நூல்களுள் செம்பொருளேயன்றிக் குறிப்பிற்றரு பொருள் மிகுதியும் உள்ளன. அவை நுணுகியறிவார்க்கே புலப்படற்குரியன. இத்துணைச் சிறப்புவாய்ந்த நூல் பல நம் தமிழ் மொழியிடத்து உளவேனும் யான் இதுபோது "கம்பராமாயணம்" என்னும் நூலாராய்ச்சியை விஷயமாகக்கொண்டு என் சிற்றறிவிற் கெட்டிய துணையும் நம் "செந்தமிழ்" வாயிலாய் விரிப்பான்றொடங்குகின்றேன்.

சுந்தரகாண்டம்; திருவடிதொழுதபடலம்

(58–வது செய்யுள்.)

கண்டனன் கற்பினுக்கணியைக் கண்களால்
தெண்டிரையலை கடலிலங்கைத் தென்னகர்
அண்டர் நாயகவினித் துறத்தியையமும்
பண்டுள துயருமென் றனுமன் பன்னுவான்.

இச்செய்யுள் அநுமன் சீதையைக்கண்டு பின்னர் ஸ்ரீராமரிடம் வந்து அவர் திருவடிதொழுது பிராட்டியின் விருத்தாந்தம் கூறுவது.

இதில் கண்டனன் எனப் பயனிலையை முன்னர்க் கூறியது என்னையோவெனின்? ஸ்ரீராமன் சீதையைத் தேடிக் கண்டு வருவதற்கு அநுமனுக்கு ஆணை தந்தவராதலின் அநுமன் காண்டற்குரிய பொருள் சீதையென்பது ஸ்ரீராமனுக்குத் துணிந்தபொருளேயாம். அநுமன் கண்டனனோ வில்லையோ என்பதே ஐயம். ஐயத்தை நீக்கலே வாக்கியம் எழுவதன் முக்கியப் பயனாதலின், கண்டனன் என்னும் ஐயத்தை நீக்குஞ்சொல்லை இங்ஙனம் முன்னர்ப்புணர்த்திக் கூறினார் எனக்கோடல் ஒன்று. அன்றியும், சீதையைக் கண்டனன் எனக்கூறின் சீதையென்ற சொல்லைக்கேட்ட துணையானே பயனிலை கண்டதாகவோ காணாததாகவோ எவ்வாறு முடியுமோ என்று ஐயத்தை விளைத்துப் பயனிலை முடியுந்துணையும் ஸ்ரீராமனை அவாவிய உள்ளத்தனாக்குமாதலின் அத்துணைச் சிறுபோதும். அந்நிகழ்ச்சி யுறாவண்ணம் துணிபொருளைக்கூறிக் காலத்தை நீட்டியாது ஐயத்தை விரைவினீக்கற்பொருட்டு கண்டனன் என்ற சொல்லை முதற்கட்பொருத்திக் கூறினாரெனக்கோடலும் ஒன்று.

இனிச் சீதைக்குரிய இயற்பெயராற்கூறாது கற்பினுக்கணி என ஒரு புனைபெயராற்கூறியது என்னெனில்? கற்பென்ற துணையானே பெண்ணென்பதும் அவள் தன்மையும் ஒருங்கே அறியக்கிடத்தலானும் கற்பென்ற சொல்லால் குறிக்கப்படும் பெண்பால் சீதை என்பது முன்னரே ஸ்ரீராமனுக்குத் துணியப்பட்ட பொருளாதலானும் சொற்பல்காமை என்னும் நயம் பற்றிக் கூறியதெனலாம். கற்பினைச் சீதை அணியாகக் கொண்டனள் எனக்கூறல் மரபாயிருக்க, கற்புச் சீதையை அணியாகக் கொண்டதெனப் பொருள்பட, “கற்பினுக்கணியை” என்று கூறியது என்னையோவெனின்? சீதை கற்புக்குணம் உடையாள் என்பது ஸ்ரீராமன் நன்கறிந்ததே ஆயினும் அவளைக்கொண்டு சென்றான் அரக்கனாதலின் அவன் ஆக்கிரமித்துக் கற்புக்கழிவுசெய்தனனோ என

ஐயுறற்குக்காரணமுண்டாதலின், கற்புச் சீதையாற்போற்றப்பட்டும் பிறர் அக்கிரமத்தால் அழிவுபெறாமலும் வனப்புற்றிருக்கின்றதெனக் குறித்தற்பொருட்டே கற்பு சீதையை அணியாகப் பூண்டு விளங்கியதெனச் சீதையின் கற்பில் எவ்வகை ஐயமும் ஒரு சிறிதும் நிகழாவண்ணம் கூறியதெனக்கொள்க. அன்றியும் கற்பென்பது பொதுவகையால் மகளிர் யாவரும் இன்றியமையாது போற்றற்குரிய குணமாம். அன்பென்னுங்குணத்தைத் தம் பதிமாட்டேயன்றி வேறெப்பொருளினும் சொல்லற்கிடங்கொடாது போற்றுதலே கற்பெனத்தகும். கற்புக்குணம்பூண்ட மங்கையர் பல்லோரும் தம் பதிமாட்டே செல்லற்குரிய அன்பைப்பிரித்துத்தம் பதிமாட்டும், பரமபதியான ஈசன்மாட்டும் செலுத்தலும், அவ்வாறு இருவகைப்பட்ட அன்பு செலுத்தினும் அவரைக்கற்புடை மங்கையராகவே உலகங் கொள்ளலும் இயற்கை. ஆயினும் ஒரு திறப்பட்ட அன்பு இருவகைப்பட்ட துணையானே அக்கற்பின் சிறப்புச்சிறிது குன்றியதாகவே கொள்ளலாம். சீதையின் விஷயத்தில் பதியும், பரமபதியும் ஒருவரான ஸ்ரீராம பிரானேயாதலால் சீதையின் கற்பில் ஒரு சிறு குறையும் இன்றாகி விளங்குதலின், கற்புக்குச் சீதை அணியாகிக் கற்பின் இயற்கையில் அமைந்த சிறிய குறையையும் மாற்றிக் கற்பை வனப்புறச்செய்தாள் எனக்கோடற்கே கற்பினுக்கணியை எனக்கூறியதெனக்கொள்க.

இனி, கண்டனன் என்ற துணையானே காண்டற்குரியவுறுப்புக் கண் என்பது தெளிவாயிருக்க கண்களால் என மிகுத்துக் கூறியது எதுபற்றியோ எனின்? ஒரு பொருளை நிச்சயித்தற்குப் பிரத்தியட்சம், அநுமானம், சாப்தம் எனப் பிரமாணங்கள் மூன்றுள்ளன. இவற்றுள் அநுமான சாப்தப்பிரமாணங்களால் தெளிந்த பொருளையும் பிரத்தியட்சம் போற்கொண்டு வியவகரிப்பது உலகவழக்கில் உண்டு. அதுபோல் சம்பாதி உயர்ந்து பறந்து சீதையை இலங்கையிற்கண்டு சொல்லிய ஆப்தவாக்கியப் பிரமாணத்தோடு அமையாது தானே கடலைத் தாவிச்சென்று சீதையைத் தன்கண்கொண்டு கண்ட பிரத்தியட்சம்பற்றிக் கூறியதென வலியுறுத்தற்கே கண்களால் என அநுமன் சொல்லியதெனக் கோடற்கென்க. அற்றாயின், கண்டனன் என்ற சொல்லை அடுத்தே கண்களால் என்ற கருவிப்பொருளையும் உடன்கூறாது கற்பினுக்கணியை என்ற சொற்குப்பின்னர் கண்களால் எனக்கூறியது என்னையோவெனின்? கற்பென்பது உள்ளத்தினிகழும் ஓர் நெகிழ்ச்சியாய குணமேயன்றிக் காண்டற்குரியபொருள் அன்றாயினும் அசோகவனத்திடை இராவணன் வந்து பிராட்டியாரோடு சம்பாஷித்தகாலத்து வெளிப்பட்ட சீதையின், கற்புத்திறத்தை அநுமன் மரத்தில் மறைந்து நின்று கண்கூடாகக்

கண்டானாதலின் சீதையையே யன்றி அவள் கற்புத்திறனையும் தன் கண்ணாற்கண்ட பிரத்தியட்சம் பற்றிக் கூறியதெனக் கோடற்கு, கற்பினுக்கணியென்ற சொற்குப்பின்னர் கண்களால் எனக் கருவிப்பொருளை வைத்ததென்க.

இனி, "தெண்டிரையலைகடல் இலங்கைத்தென்னகர்" என்றதனால் அநுமன் சீதையைக்கண்ட இடங்கூறியவாறாயிற்று. இலங்கையென்ற இடப்பெயரோடு அந்நகர்நின்ற திசையையும் உணர்த்துவான் தென்னகர் எனக்கூறியதாகக் கொள்ளலுமாம். அன்றியும் சீதையைக்காண்டலே காரணமாக அநுமன் இலங்கை சென்றிருப்பினும் மாற்றான் வயிற்சென்றுழி அவன் வலிமுதலியன ஆய்ந்தறிந்து தம் நாயகற்குணர்த்தல் உத்தமத்தூதின் கடனாதலால் அம்முறைபற்றி அநுமன் இலங்கையின் தன்மையை நன்காராய்ந்து ஸ்ரீ ராமனுக்குக் கூறியதாகப் பொருள்கோடற்கும் இடந்தந்துளது. அஃதெங்ஙனம் எனின்? தென்னகர் என்பது அழகுபொருந்திய நகர் எனப்பொருள்படும். இதனால் அழகு முதலியன பொருந்திநிற்றற்கு உரிய புண்ணியம் அமைந்து நிற்பதென்பது உய்த்துணரக்கிடந்தது. இதனால் இராவணன் முன்னர்ச்செய்த தவம் முதலிய நற்கருமத்தின் பயனாய் இத்திரு வெய்தினனென்பது தெளிவாம். ஆயினும் அலைகடலிலங்கையென இலங்கைக்குக் கொடுத்த அடையால் கடல்சூழ்ந்த இலங்கை எனப்பொருள்பட்டு கடல் கரியநிறத்தைக்குறிக்க கரியநிறம் பாவத்தைக்குறிக்க பாவத்தாற் சூழப்பட்ட இலங்கையெனக் குறிப்பிற்றரு பொருளாய்க் கொள்ளற்கு இடந்தந்துள்ளது. இதனால் முன்னர் இலங்கைக்கு அரசனான இராவணன் புண்ணியப்பேறுற்றிருந்தும் பின்னர் அவன் செய்த பாவம் மிகுத்துச் சூழந்துவிட்டமையால் விரைவில்அவன் அழிதற்குரியனென அநுமன் உய்த்துணர்ந்து ஸ்ரீராமனுக்கு அக்கருத்துந்தோன்றக் கூறினான் எனவும் கொள்ளலாம். அன்றியும் கடல் தாழிட மாதலின் அதனை அடுத்த இலங்கையும் தாழ்வடைந் திருக்கின்றதெனக் குறித்ததாகவுங்கொள்ளலாம். இதுவன்றியும் வானரவீரர்க்குச் சீதையைத் தேடிவரும்படி குறித்தகாலத்து அநுமன் வாராது காலந்தாழ்த்தமை பற்றி ஸ்ரீ ராமன் தன்னை அபராதியாய் மதித்தல் கூடுமாதலின் அவ்வாறெண்ணாதிருக்கக் கடலைக்கடந்து சீதையைக் காண வேண்டியிருந்த தாமேற்கொண்ட செயலின் அருமைதோன்றத் 'தெண்டிரை அலைகடலிலங்கை' எனக் கூறித்தல் அபராதத்தை க்ஷமித்தற்குக் காரணமுளதெனக் கூறினான் என்றலும் ஆம்.

இனி, அண்டர்நாயக என இராமனை ஓர் புனைபெயர்கொண்டு அநுமன் விளித்தவாறென் எனின், கடல்சூழ்ந்த இலங்கை என்றதனால்

சத்துரு பக்கல் தாழ்வு குறித்தானாகலின் அதனின் மாறாய்த் தன் நாயகன்மாட்டுள்ள. உயர்வுகுறிப்பான் அண்டர்நாயக எனக் கூறினானாகும். அன்றியும் அண்டர் யாவரும் இராவணன்மாட்டு ஏவற்றொழில் புரியக்கண்ட அநுமன் இராவணனினும் சிறப்புடைமை இராமனிடைக்கண்டானாதலின் அண்டர்நாயகன் என்ற பெயர் புனைந்தான் எனக்கொள்க. அன்றியும் கடல்சூழ்ந்த இலங்கை என்றதனால் பாவஞ்சூழந்த இலங்கை எனக்கொண்டு அதற்கு இறைவனும் சத்துருவுமான இராவணன் பாவியெனத் துணிந்தான்; அதற்கு மாறாய்ப் புண்ணியபூமியில் உறைபவர் அண்டர் ஆதலின் அவர்க்கு நாயகன் என்றதனால் ஸ்ரீராமனைப் புண்ணியமூர்த்தியெனக் கொண்டு விளித்தானென்க. இதனால் பாவந்தோற்பதும் புண்ணியம் வெல்லவதும் ஒருதலையாகலின் பாவியாகிய இராவணனுக்குத் தோல்வியும், ஸ்ரீராமனுக்கு வெற்றியும் உளவாதல் குறித்துக் கூறினான் எனக் கோடலும் அமையும். அன்றியும் இராவணன் அண்டர்கட்கு இடுக்கண் செய்வதால் தம் அடியார்க்குறும் இடையூறு நீக்கல் ஆண்டான் கடமையாதலின், ஸ்ரீராமன் இராவண ஸம்ஹாரம் செய்வதற்குக் காரணமுண்டெனத் தோற்றுவான் 'அண்டர் நாயக' என விளித்தான் என்பதுமாம்.

இதனையடுத்த இனியென்னும் பதப்பிரயோசனம் யாதோ என்னின்? தான் இதுகாறும் உணர்ந்து கூறிய யாவும் மெய்யுணர்ச்சியேயன்றி ஒரு சிறிதும் பொய்யுணர்வில்லை எனத் தன் துணிபின் வன்மை தோற்றற்கென்க.

இனித் துறத்தி என்றார்: துறத்தல், நீக்கல், ஒழித்தல், தவிர்தல் முதலிய சொற்கள் பிற்காலத்தில் பொருள்வேற்றுமை சிறிதுமற்ற ஒரு பொருள் குறித்த பலவினைத் திரிசொல்லாகக்கொள்ளும் வழக்கு உளவேயன்றி முற்காலத்துச் சான்றோராய் நூலாசிரியர் உரையாசிரியர் முதலினோர் இச்சொற்களைச் சிறிது பொருள் வேற்றுமை உடையனவாகவே கொண்டு அவ்வவ்விடத்திற்கேற்ப அவற்றைப் பிரயோகிக்கும் கொள்கையுடையாரென்பது பண்டைநூல் உரையாராய்ச்சியுடையாரது துணிபு. இவ்வாறு பல சொற்களையும் அவ்வவற்றிற்குரிய பொருளாற்றலை நன்குணராது பிரயோகிக்கும் வழக்கை எடுத்து விளக்கப்புகின் மிகவிரியுமாதலால் இங்குப் பிரயோகிக்கப்பெற்ற துறத்தல் என்னும் சொற்பொருளாற்றல் ஒன்றே ஆராய்வாம். ஒரு காலத்துத்தான் நீக்கியபொருள் தன்வயின் பிற்காலத்து வந்து அடையவுங்கூடும். அவ்வாறன்றி ஒருகாலத்துத் தாம் நீக்கியது பின்னர் எக்காலத்தும் தம்மை அடையாது விடுதலென்ற பொருள்பற்றியே துறத்தல் என்னும் பதம் பிரயோகிக்கப்படுவது. இதனை ஒரு காலத்து

இல்லறவின்பத்துப் பொருந்திநின்று பின்னரவ்வின்பம் ஒரு சிறிதும் தம்மை வந்து அடையாது அறவே ஒழித்தவரைத் துறந்தார் எனக்கூறும் வழக்குப்பற்றியுணர்க. இதனால் இங்குத் "துறத்தி ஐயமும்பண்டுள துயரும்" என்ற இடத்தும் ஐயமுந் துயரும் இனி எக்காலத்தும் ஒரு சிறிதும் ஸ்ரீ ராமனை வந்தடையா வென்னுந் துணிபுபற்றி அப்பொருட்குரிய "துறத்தி" என்னுஞ் சொல்லாற் கூறியதென்க.

இனி, ஐயமும் என்று பல்வகை ஐயங்களையும் உளப்படுத்தற்கு ஜாதி ஒருமையாற்கூறினார். பல்வகை ஐயமாவன: - சீதையிருக்குமிடம், அவள் கற்பின் நிலை, மாற்றான்வலி, தன்வலி, போரில் வெற்றி முதலியன. இவையாவும் தாம் நன்காராய்ந்த துணிபுரை முன்னர்க் கூறினராதலால் அதுபற்றிய ஐயம் ஸ்ரீராமனுக்கு இனி நிகழன் முறையன்றென்பான் இனித்துறத்தி ஐயமும் என்றார்.

இனி, பண்டுளதுயரும் என்றது எற்றுக்கெனின், ஐயம் பல்வகையாயவாறுபோல் துயரும் பல்வகைக் காரணம்பற்றி எழுந்தனவாகும். துயரெனக்கூறியமையாது பண்டுளதுயர் என்றதனால் சீதையின் பிரிவால் உண்டாய துயர் நீங்குங்காலம் கிட்டியதனால் துயரைப் பண்டுளதெனக் கொண்டாரென்க அன்றியும் ஸ்ரீ ராமனுக்குச் சீதையின் பிரிவு நீண்டகாலம் உண்டாயதெனக் காலத்தின் நீடிய தன்மை குறிப்பான் பண்டெனக்கூறியதுமாம். அல்லதூஉம் ஸ்ரீராமன் நாடுவிட்டுக் காடடைந்ததனால் தாயர் தம்பியர் முதலியோரை விட்டு நீங்கிய துன்பமும் இராணவதம் விரைவில் முடிந்து நாடடையத் தீருமாதலின் அத்துயரும் நீக்கற்குரிய என்றற்குப் பண்டுளதுயரும் துறத்தியென்ற தென்க. மற்றும் பாற்கடலில் தேவர்கட்கும் தண்டகவனத்தின் முனிவர்களுக்கும் கண்டகனான இராவணனை வதைத்து அவர்கட்கு இன்பம் நல்குவதாக வாக்களித்தபடி அது நிறைவேறாது தாங்கூறிய துஷ்டநிக்ரகஞ்செய்து சிஷ்டபரிபாலனம் செய்யக் காலந்தாழ்த்தமையான் ஸ்ரீராமனுக்குண்டாய துயரும் குறித்தற்குப் பண்டுளதுயரும் எனக் கூறியதெனலும் பொருந்தும்.

இனி, "அநுமன் பன்னுவான்" என முடித்தமையின் இச்செய்யுள் அநுமனது கூற்றெனவுணர்க. இதில் பயனிலையை இறந்தகாலத் தாற்கூறன் மரபாயிருக்கப்பன்னுவான் என எதிர்காலத்தாற்கூறியது என்னையோ எனின், தாம் கருதிய விஷயங்களைத் தொகுத்து இச்செய்யுளிற் கூறியதேயன்றிப் பின்னரும் சில செய்யுட்களால் வகுத்துரைப்பான் புகுகின்றராதலின் என்ப.

அன்மொழித் தொகைப்பொருண்மேல்வரும் ஆகுபெயர்

சி.கணேசையர்

புன்னாலைக்கட்டுவன், யாழ்ப்பாணம்.

அன்மொழித்தொகைப் பொருண்மேல் ஆகுபெயர் வருமென்பது சேனாவரையர் பரிமேலழகர் முதலாயினோர் கருத்து. தொல்காப்பியத்துச் சொல்லதிகாரத்து வேற்றுமை மயங்கியலிலே 'முதலிற் கூறுஞ் சினையறி கிளவியும்' என்னும் ஆகுபெயர்ச் சூத்திரத்து 'இருபெயரொட்டும்' என்பதற்குச் சேனாவரையர் பதவுரையில் 'அன்மொழிப் பொருண்மேனின்ற விருபெயரொட்டும்' எனவுரைத்து, விசேடவுரையில் 'அன்மொழித்தொகை எச்சவியலில் உணர்த்தப்படுதலின் ஈண்டுக் கூறவேண்டாவெனின்; - அன்மொழித்தொகை தொகை யாதலுடைமையான் ஆண்டுக்கூறினார்; இயற்கைப்பெயர் ஆகுபெயரெனப் பெயர் இரண்டாயடங்கும்வழி ஒரு பெயர்ப்பட்டதென மேலும் வந்தவாறு கண்டுகொள்க. அன்மொழித்தொகை எச்சவியலில் உணர்த்தப்படும்; அதனால் அவ்வாகுபெயராதலுடைமை பற்றி ஈண்டுக் கூறினார். எச்சவியலுட் கூறப்பட்டவாயினும் வினையெச்சம் முதலாயின வினைச் சொல்லாதலும் இடைச் சொல்லாதலுமுடைமையான் வினையியலுள்ளும் இடையியலுள்ளும் கூறியவாறு போலவென்பது' எனவுரைத்தமையானும். 'அணங்கு கொலாய்மயில்கொல்லோ கனங்குழை-மாதர்கொன் மாலுமென்னெஞ்சு' என்னுங் குறளுரையில் 'கனங்குழை' என்பதற்குப் பரிமேலழகரும் அன்மொழித் தொகைப் பொருளமைய 'இக்கனவிய குழையை யுடையாள்' எனப் பொருளுரைத்து, விசேடவுரையில் இரண்டு மொன்றென்பது தோன்ற 'கனங்குழை ஆகுபெயர்' எனவுரைத்தமை யானும் அது கருத்தென்பது போதரும். இலக்கணவிளக்க நூலாரும் சொல்லதிகாரத்துப் பெயரியலில் 'பொருண்முத லாறோடளவை சொற் றானி' என்னும் ஆகுபெயர்ச் சூத்திரத்து விசேடவுரையில் இக்கருத்தேயமையக் கூறினார்.

இனி, அணங்குகொலாய்மயில் கொல்லோ கனஞ்குழை - மாதர் கொன் மாலுமென் னெஞ்சு' என்பதிற் 'கனங்குழை' என்பதற்கு கனவிய குழையையுடையாளெனப் பொருள் கூறின்; அஃது ஆய்மயில்கொல் என்னும் அஃறிணை முடிபேற்று வழுவாதலின் அவளுருவ முதலியவற்றையே ஆகுபெயரானுணர்த்தி, உருவம் அணங்கு கொல் பிறிதுகொல்! சாயல் ஆய்மயில்கொல் பிறிதுகொல்! நோக்கம் மாதர்கொல் பிறிதுகொல்! என வழுவின்றி முடிதலிற் பரிமேலழகர் ஆகுபெயர் என்றது இக்கருத்தே பற்றியெனின்:- அவை அவாய்நிலையானே பெறப்பட்டு 'அணங்குகொல்! ஆய்மயில்கொல்! மாதர்கொல்! என ஐயமுறுதற்கு ஏதுவாய் நிற்றலானும்,

ஏதுவாவன எழுவாயாயின் ஏதுவாவன பிறவேண்டுமாகலானும், உருவ முதலிய பொதுச்சொற் கிளத்தல் திணைபால்கள் துணியப்படாத வற்றிற்கே அன்றித் துணியப்பட்டவற்றிற்கு வேண்டியதின்றாகலானும் இக்கனவிய குழையையுடையாளது உருவம், சாயல், நோக்கம் என விளங்கக் கூறுவராகலானும், சுருக்கி விளக்கவே அவர்க்கியல்பாகலின் பதவுரையில் வாளாகூறி விசேடவுரையில் 'எழுதலாகாவுருவுந் தன்வருத்தமும் பற்றி அணங்குகொல் என்றும் சாயலும் பொழில் வயினிற்றலும் பற்றி ஆய்மயில்கொல் என்றும், தன்னெஞ்சஞ் சென்றமையும் அவளெதிர் நோக்கியவாறும் பற்றிக் கூறினான் என உரைத்தமையானே விளக்கினார் என்றார்க்கு, அவர் அதனானே ஒருதலைக் காமத்துட்பட்டு நின்ற தலைவற்குத் தலைவி வடிவம் முதலியன சிறந்துழியன்றி ஐயநிகழாமையின் அங்ஙனமைய நிகழ்ந்தமைக்கேதுக் கூறினாரேயன்றி ஆகுபெயரின்னதென்பதை விளக்கக்கூறினாரல்லர் என்பது பெறப்படுதலானும் அது பொருந்தாதென்க. கனங்குழையையுடையாள்-ஆகுபெயர் என்னாது கனங்குழை ஆகுபெயரன்றமையானும் அது பொருந்தாதென்பது.

அற்றேல், உயர்திணை அஃறிணை முடிபேற்றுவந்தமைக்கு விதியாதோவெனின்; அஃது ஐயவணிபற்றி வந்த வேறோர் செய்யுள் முடிபேயாமென்பது. இங்ஙனே பிறரும் 'புண்டரிகத்தி கால்பொன்னம்பாணவைகொ லண்டர்தமணங்குகொலென்னின்னரைக் கண்டறிவேனெனைக் காதல்பூட்டிய - வொண்டொடியினை யளென்றுணர்கிலேனரோ' எனக் கூறுதல் காண்க. உவமைபற்றியே அன்றிப் பொருள்பற்றியும் ஐயவணிவருமென்பது சில ஆசிரியர் கருத்து.

இனி, 'கனங்குழை' என்பதை ஆகுபெயரென்ற பரிமேலழகர் 'தொடலைக் குறுந்தொடி என்பது அன்மொழித்தொகை என்ற தென்னையெனின்; - குறுந்தொடி என்பது அன்மொழித் தொகைப்பொருளையுணர்த்தி நிற்ப, தொடலையென்பது அதனை விசேடித்துவந்ததாகக் கொள்வரென்று கருதியே, அதற்கு 'மாலைபோலத் தொடர்ந்த சிறுவளையினையுடையாள்' எனத்தாங்கொண்ட பொருளை இனிது விளக்குமாறு 'தொடலைக்குறுந்தொடி அன்மொழித்தொகை' எனத் தொகை நோக்கிக் கூறினாரென்பது.

இங்ஙனே சேனாவரையரும் 'மக்கட்சுட்டு' என்பதற்குத்தாங் கொண்ட பொருளை இனிது விளக்குமாறு 'மக்களென்னுஞ் சுட்டு யாதன்கணிகழும் அது மக்கட்சுட்டு எனப் பண்புத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகை' எனத் தொகைநோக்கிக் கூறினார். இவையும் பெயரைநோக்குமிடத்து ஆகுபெயராயடங்கும் என்க. ஆதலின் அன்மொழித் தொகைப்பொருளில் ஆகுபெயர் வருமென்பது தேற்றம்.

தமிழ்ச் சங்கமும் ஈழ நாடும்

- ஆ.முத்துத் தம்பிப் பிள்ளை

முதற் சங்க முதலாய முச்சங்கங்களிலும் விளங்கிய புலவர் பல்லாயிரவர். அவர்கள் ஒரு ஜாதியினரும் ஒரு சமயத்தினரும் ஒரு தேயத்தினரும் ஒரு தொழிலினருமல்லர். அவர்கள் பல ஜாதியாளரும் பல சமயிகளும் பல தேயத்தினரும் வேறுபட்ட தொழிலினருமாகியே யிருந்தாரென்பது அவர்கள் பெயரூர் முதலியவற்றால் நன்கு துணியப்படும்.

தமிழ்நாடு செந்தமிழ்நாடும் கொடுந்தமிழ்நாடுமென இருபாற்படும். அவற்றை மருவிச் சூழ்ந்துள்ள நாடுகள் பதினேழு. அவை, "சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந் துளுக்குடகங், கொங்கணங் கன்னடங் கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கம், கங்கமகதங்கவுடங்கடாரங் கடுங்குசலந் தங்கும் புகழ்த்தமிழ் சூழ் பதினேழ்புவி தாமிவையே" என்னுஞ் செய்யுளாலறியப்படும்.

அவற்றுள் சிங்களம் என்பது தென்பாண்டிபுனனாடுகளுக் கணித்தாயுள்ளது. ஈழம் என்பது சிங்களத்தின் பரியாயமும் பகுதியுமாயடங்குமென்பது இலக்கண விளக்க "செந்தமிழ் நிலஞ்சேர்" என்னுஞ் சூத்திரவுரையாற் கொள்ளப்படும். மண்டலப் பெயர் கொண்டு வழங்கும் நாடுகளுள்ளே ஈழமுமொன்றாம். சேரமண்டலம் சோழ மண்டலம் பாண்டிமண்டலம் ஈழமண்டலம் தொண்டைமண்டலம் என வருதல் காண்க.

சிங்களமென்னும் பெயர் சிங்கவாகுவின் புத்திரன் ஆண்டமையால் வந்த தென்பது பொருந்தாது. சிங்கவாகுவின் புத்திரன் இலங்கைக்கு வந்தது இற்றைக்கு இரண்டாயிரத்தைஞ்ஞூறு வருஷங்களுக்கு முன்னராம். இற்றைக்கு ஐயாயிரம் வருஷத்துக்கு முன்னுள்ள பாரதத்திலே சிங்களமென்னும் பெயர் கேட்கப் படுகின்றது. இலங்கைக்குச் சிங்களமென்னும் பெயர் அங்குள்ள கறுவாப்பட்டையால் வந்தது. சிங்களம் என்பதன்பொருள் பட்டை. சிங்களத்து வீபம் பட்டைத்தீவு (லக்ஷ்மன் ராமச்சந்திரவைத்தியபண்டிதர் எம்.ஏ.செய்த சமஸ்கிருத ஆங்கில அகராதியிற் காண்க.)

சிங்களத்தீவின் வடபாகமும் கீழ்பாகமுமே பெரும்பாலும் ஈழமண்டலமென வழங்கப்பட்டது. இவ்வீழமண்டலம் இலங்கைக்கு விஜயராஜன் வந்த (543ம்) வருஷ காலத்துக்கு முன் அஃதாவது

இரண்டாயிரத்து நானூறு வருஷத்துக்கு முன்னரும் பல்லாண்டுகளுக்கு முன்னே தமிழ் மக்கள் குடிகொண்டிருந்த நாடாம். இவ்வுண்மை விஜயராஜன் வரும்போது திருக்கேதீச்சரம் சிதிலமாயிருந்ததென்றும், பின்னரதனை அவன் சீரனோத்தாரணம் பண்ணுவித்தானென்றும் வரும் வைபவமாலையாற் றுணியப்படும்.

இன்னும் பாலாவி, மாதோட்டம், மாந்தை என்னும் தமிழ்ச் சொற்கள் இடப்பெயராய்ப் பண்டைக்காலந் தொட்டாங்கே வழங்குதலும், தேவாரத்திலே, பாலாவி, மாதோட்டம், திருக்கேதீச்சரம், திரிகோணமலை என்னும் பெயர்கள் வருதலும், பேட்டோலக்சி, பென்னட் முதலிய ஐரோப்பிய பண்டிதர்கள் எழுதிய இலங்கை வரலாற்றில் "விஜயன் வருதற்குப் பன்னெடுங்காலத்துக்கு முன்னே தமிழர் இலங்கையிற் குடிகொண்டிருந்தார்களெனக் கூறுதலும் ராயல் ஏஷியாடிக் சொசைட்டி யாரது பத்திரிகையிலே, "ரோமர் இலங்கையிலே வர்த்தகஞ்செய்த காலத்திலே தமிழர் மாதோட்டத்தை இராசதானியாகக் கொண்டு அரசு செய்தார்கள்" என்றும் "அவ்வரசு விசயன் காலத்துக்கும் யாழ்ப்பாடி காலத்துக்கும் மிகவும் முந்திய பழமையினையுடையது" என்றும் வருதலும், இதற்குப் பிரமாணமாம்.

இவ்வாறு இலங்கையில் அரசு கொண்டிருந்த தமிழரசர் சோழபாண்டி மண்டலத்திராசபரம்பரையினரும் அவரோடு கலப்புடைய வருமாயிருந்தார்கள். அவர்கள் மாதோட்டத்திலே கட்டியிருந்த கோட்டை மிக்க வலிமையும் அழகும் அற்புதமுமுடையது. பெருமரக்கலங்கள் மன்னார்க்கடலில் வருமாயின் அவைகளைத் தன்மட்டில் இழுத்துக் கொள்ளும் காந்தப்பொறியுடையதாயிருந்ததென்பர். இத்துணைச் சிறந்த நாகரிகம் வாய்ந்த அந்நகரத்து மக்கள் தமிழ்க்கல்வியிலே பேரபிமானமும் பாண்டித்தியமுமுடையராயே விளங்கினராதல் வேண்டும். அவர்கள் காலம் முதற்சங்கமும் இடைச்சங்கமும் நடைபெற்ற காலம். அச்சங்கங்கள் நடைபெற்ற நகரங்களுமோ மிகச்சமீபத்தே எதிர்க்கரையில் இருந்தன.

மாதோட்டத்துப் புலவர்க்கு அக்கரையிலேயுள்ள சங்கமும், அக்கரையிலேயுள்ள புலவர்க்கு இக்கரையிலேயுள்ள இராசசபையும், பிரபுக்கள் மிகுதியும் திருக்கேதீச்சர சிவாலயமும் காதற்பொருளாமன்றோ. அதனால் அங்குள்ளார் இங்கும், இங்குள்ளார் அங்கும் போக்குவரவுடையராயிருந்தனர். தமிழ்ச்சங்கத்திலே ஆசனம் பெற்று வீற்றிருத்தற்குச் சிங்காசனம் பெற்ற அரசரும் விரும்பித் தம்புலமை நாட்டினரென்றால் அக்காலத்தில் அச்சங்கப் பலகையேற்றம் போலும் பெரும்பேறும் பெரும்போகமும் வேறில்லையெனல் வேண்டும். எனவே ஈழநாட்டுப் புலவரும் அரசரும் அதனைப் பெரிதும்

விரும்பினராதல் வேண்டும்.

"யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு"

இத்திருவாக்குக் கொடுந்தமிழ் நாட்டிலே புலைக்குலத்திலே பிறந்தவரும் கடைச் சங்கப்பலகையேறித் தம்மைப்பிரமதேவரது அமிசாவதாரமென நாட்டினவருமாகிய தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரது சுவானுபவமன்றோ. இவ்வுண்மை முந்திய சங்கத்தாருக்கு மொப்பாமன்றோ. அதனை ஈழநாட்டு மக்கள் கடைப்பிடியா திருந்தவரல்லர். ஆகவே ஈழநாட்டுப் புலவர்களும் அரசரும் தமிழ்ச் சங்கமேறியிருந்தாரதல் வேண்டும்.

முதற்சங்கத்திலேயிருந்த முடிநாகராயர் என்பவர் ஈழநாட்டு வேந்தராதல் வேண்டும். இலங்கையிலே விஜயராஜன் காலத்துக்கு முன்னே நெடுங்கால மரசுசெய்தவர்கள் நாகராயரென்னும் பெயர் புனைந்திருந்தனர். முன்னொரு காலத்திலே இலங்கையிலே நாகர்கள் மிக்க நாகரீகமும், பராக்கிரமமுடையராயிருந்தார்கள் என்பதும், அவர்கள் இராச்சியம் ஒரு காலத்தில் இமயம் வரைக்கும் வியாபித்திருந்த தென்பதும், நாகப்பட்டினம் நாகபுரம் நாகர்கோயில் முதலிய நகரப்பெயர்களால் அநுமிக்கப்படும். நாக கன்னிகை வயிற்றிலே சோழ ராசனுக்குப் புத்திரனாய்ப் பிறந்து நாகப்பட்டினம் போய்த் தந்தையைக் கண்டு தொண்டைநாட்டுக்கு அரசனாய் முடிசூட்டப்பெற்றவன் ஒருவனுளனென்பது பத்துப்பாட்டிலே கூறப்படுகின்றது. அந்நாக கன்னிகை இந்நாகர் குலக் கொடியாதல் வேண்டும். இந்நாகர்கள் பின்னர்க் காலத்திலே தமிழரால் அடிப்படுத்தப்பட்டு அரசிழந்து சுருங்கினார்கள். அவர் வழிவந்தோரே இக்காலத்திலே விந்தனையிலுள்ள வேடரென்பது அநேகர் துணிபு.

இன்னும் ஈழநாட்டிலே நாகர்கோயில் என்னும் பெயரால் ஒரூருளது. யாழ்ப்பாணம் பூர்வம் சிங்களரால் நாகத்தீவு என்று வழங்கப்பட்டது. இதுவும் பூர்வம் நாகர்கள் இங்கிருந்தமைக்குச் சான்றாம். அரசிழந்த நாகர்கள் ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்திலும் விந்தனைப்பகுதியிலும் நயினார் தீவிலும் போயொதுங்கி இருந்தாராதல் வேண்டும்.

இன்னும் கடைச்சங்கத்திலிருந்த இளநாகனாரும் இலங்கை அரசருளொருவராதல் வேண்டும். இளநாகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவர் கிறிஸ்தாப்தம் 38ல் அரசு செய்தவர். அவர் பின்னும் அரசிழந்து பாண்டிநாடு சென்று அங்கே சிறிதுகாலம் வசித்துப் பாண்டியன் கொடுத்த சேனைகொண்டு தமதரசு மீட்டவர். அவர் அங்கிருந்த காலத்தில் இறையனாரகப்பொருளுரை கேட்டார் போலும். இறையனாரகப்பொருளுரையை ஆசிரிய பரம்பரையாகப்

பாடங்கேட்டாருள்ளே இளநாகருமொருவராகக் கூறப்படுவர். அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்குரைத்தாரெனக் கூறப்படுதலால் நீலகண்டனார் அவருக்கு மாணாக்கராவார். முசிறி என ஈழநாட்டகத்தும் ஒரூருளது. ஆதலின் நீலகண்டனாரும் ஈழநாட்டுப் புலவராதல் வேண்டும்.

இன்னும் மாந்தையிலும் மணற்றியிலும் பாண்டியர் போர்புரிந்து பெற்ற கொற்றமும் இறையனாரகப் பொருட்கோவையிற் கூறப்படுகின்றது. மாந்தையென்பது மாதோட்டத்துக்குச் சமீபத்தே யுள்ளவூர். மணற்றி என்பது யாழ்ப்பாணம். அது மணல்நாடு என்றும் மணற்றிடல் என்றும் ஒரு காலம் வழங்கப்பட்டது. அஃதொருகாலம் இலங்கையரசர் பாண்டியரோடும் சோழர்களோடும் எதிர்பொருதற்குப் போர்க்களமாகவிருந்தது. அதன் பகுதிகளுளொன்று இன்றும் களபூமி என்னும் பெயரால் வழங்கும். மாந்தையிலும் மணற்றிடலிலும் கிறிஸ்தாப்தத்துக்குமுன்னே (103) 103ம் வருஷத்தில் ஒரு பெரிய யுத்தம் நடந்தது. அதிலே பாண்டியர் வாலகம்பாகுவைப் புறங்கண்டு அவன் மனைவியையும் புத்த பாத்திரத்தையும் கவர்ந்து கொண்டேகியதோடு ஈழநாட்டையும் தமதடிப் படுத்திப் போயினர் என மகாவமிசங் கூறுகின்றது.

இன்னும் சிலப்பதிகாரத்துக்குரைசெய்த அடியார்க்கு நல்லாரும் ஈழ நாட்டாரெனப்படுவர். அவர் குணபூஷண சிங்காரியராஜாவுக்கு மந்திரியாய் இருந்து ஈழநாட்டில் அநேக தருமாலயங்களும் வித்யாசாலைகளும் ஸ்தாபித்தவர். அவர் அமைப்பித்த திருக்குளம் இன்றுமுளது. இஃததடியார்க்குநல்லார் குளமென வழங்குகின்றது. அது வண்ணைச் சிவாலயத்துச் சந்நிதித் தெருவிலுள்ளது. அதற்கயலிலே அவர்தமது அரசன் பெயராலே அமைப்பித்த குளம் ஆரியகுளமென இக்காலத்து வழங்குகின்றது. அவர் இருந்த மனைநிலமும் அவர்பெயராலேயே வழங்குகின்றது. அவர் காலத்திலேயே தமிழ் யாழ்ப்பாணத்திலே மிகவிருத்திபெற்றது. அவரே அறுபத்து மூன்று நாயன்மாருக்கும் ஆலயமும் பூசைக்கு நிபந்தமும் யாழ்ப்பாணத்தில் முதன்முதல் வகுத்தவர். அவ்வாலயமிருந்தவிடம் நாயன்மார்கட்டு என இன்றும் வழங்குகின்றது.

முதிரம் மாந்தை என்னும் பெயர்களையும் தம்பிக்கஞ்சிக்காடு கொண்டிருந்த ஸ்ரீசங்கபேபதியினது சரித்திரத்தையும் நோக்கும்போது

"அந்தநாள் வந்திலை யருங்கவிப் புலவோய்
இந்தநாள் வந்துநீ நொந்தெனை யடைந்தோய்
தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன்
விலைதனை மீட்டுன் வறுமைநோய் களையே"

"வெம்புங் காலை வெட்டும்பி விழுஞ்சிரம்
செம்பொன் கோடி விலையெனச் சிந்தித்தான்
உம்பர் நாடு முலகினுந் தேடினும்
எம்பி போலெமக் கியாவரி னியரே"

எனக் கூறிய குமணனும் ஈழநாட்டிலுள்ளான் எனத் துணிதற்கிடமாகின்றது. ஸ்ரீசங்க போதியினது இயற்பெயர் குமணன் போலும். மகாவம்சத்திலே கூறப்படும் ஸ்ரீசங்கபோதி சரித்திரமும் புறநானூற்றிலும் பிறவற்றிலும் வருங்குமணன் சரித்திரமும் காலமும் பெரிது மொத்திருக்கின்றன.

யாழ்ப்பாணத்திலேயுள்ள செம்பியன் பற்று, பல்லவராயன் கட்டு, தொண்டைமானாறு, பாண்டியன்றாழ்வு முதலிய இடப் பெயர்களை நோக்குமிடத்துத் தமிழ்நாட்டு வேந்தர்கள் யாழ்ப்பாணத் தொடர்புடையராயிருந்தாரென்பது நன்கு துணியப்படும்.

இன்னும் மாதோட்டத்துக்குத் தெற்கேயுள்ள குதிரைமலை மிக்க பழமையும் யவனதேசம் வரையும் பரந்த கீர்த்தியுமுடையது. அஃதொரு காலம் சிற்றரசர்க்கு இருக்கையாயுமிருந்தது. இதற்குத் தலைவராயிருந்த சிற்றரசருள்ளே எழினியும் பிட்டங்கொற்றனும் புறநானூற்றிற் பாடப்பட்டோர்.

இங்ஙனம் வருமேதுக்களால் தமிழ்ச்சங்கப் புலவருள்ளே ஒரு சிலர் ஈழநாட்டுப்புலவராதல் வேண்டும் எனவும், தமிழ்ச்சங்கப்புலவராற் பாடப்பட்டார் உள்ளும் ஒரு சிலர் ஈழ நாட்டாராதல் வேண்டுமெனவும் அவரே ஈழநாட்டிலே முதலில் தமிழ் வளர்த்தாராதல் வேண்டுமெவும் அநுமிக்க இடமாகின்றது.

சங்க இலக்கிய அக மரபுகளும் காளிதாசரின் இருது சம்ஹாரமும் - ஒப்பீடு

முனைவர் உ.கருப்பத்தேவன்

முன்னுரை

சங்க அகப்பாடல்களில் தலைவன் தலைவியர் காதல் உணர்வுகள், பசலை நோய், பிரிவுத்துயர் முதலான அகநிகழ்வுகளைப் பாடும்போது புலவர்கள் கையாண்டுள்ள வருணனைகள், உவமைகள், இலக்கியக் கூறுகள் ஆகியன காளிதாசரின் இருது சம்ஹாரத்தில் காதல் நிகழ்வுகளை விளக்கும்போது பயன்படுத்தும் வருணனைகள், உவமைகள், இலக்கியக் கூறுகள் ஆகியவற்றோடு ஒத்திருக்கின்றன. சங்க அக இலக்கியத்தின் செவ்வியல் மரபுகள், காளிதாசரின் இருது சம்ஹாரத்திலும் காணப்படுகின்றன. இதனை ஒப்பிட்டு விளக்கும் நோக்கத்தில் இவ்ஆய்வுக் கட்டுரையின் தலைப்பு 'சங்க அக இலக்கிய மரபுகளும் காளிதாசரின் இருது சம்ஹாரமும் ஒப்பீடு' என்றமைகின்றது.

காளிதாசர் அறிமுகம்

காளிதாசரின் காலத்தைச் சரியாக இதுநாள்வரையில் எவரும் கணித்துக் கூறவில்லை. காளிதாசர் அந்தணர் ஒருவருக்கு மகனாகப் பிறந்து இளமையிலேயே தாய்தந்தையரை இழந்தவர் என்றும், பின்னர் ஆட்டிடையன் ஒருவனால் வளர்க்கப்பட்டவர் என்றும் ஹேமவிஜயர் என்பவர் தம் 'கதாரத்னாகரம்' என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு வளர்ந்த காளிதாசரை ஓர் அரசகுமாரி மணக்க வேண்டிய சூழல் ஏற்பட்டது. அவள், காளிதாசரைக் காளியிடம் அருள்பெறச் செய்தாள்; காளி அருளால் அவர் மகாகவி ஆனார். காளி அருள்பெற்றமையால் தம் பெயரையே காளிதாசர் என மாற்றிக் கொண்டார் என இக்கதை கூறுகின்றது. கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இலங்கையில் குமாரதாசன் என்ற சிங்கள மன்னன் ஆண்டு வந்தான். அவன் காளிதாசரின் நெருங்கிய நண்பன்; காளிதாசர் இலங்கையில் அவனுடைய விருந்தினராக இருந்த காலத்தில் ஒரு தாசியின் கையால் இறந்தான். நண்பனைப் பிரிந்த துன்பத்தால் குமாரதாசன் உடன்கட்டை ஏறி உயிர் நீத்தான் என இலங்கையில் கர்ண பரம்பரைக் கதைகளும் உண்டு. (நாவலியூர் நடராஜன், வடமொழி இலக்கிய வரலாறு, ப.142)

ஆயினும் இக்கதைகளில் உண்மையும் இல்லை; நம்பகத் தன்மையும் இல்லை; ஏனெனில் இதற்கான வரலாற்றுச் சான்றுகள் இதுநாள் வரையில் கிடைக்கவில்லை.

காளிதாசரின் படைப்புக்கள்

காளிதாசர் இந்திய நாட்டுக் கவிஞர்களுள் தலைசிறந்தவர் ஆவார். அவர் தம் படைப்புக்களால் சமசுகிருத மொழிக்குச் சிறப்புச் சேர்த்துள்ளார். அவரது படைப்புக்கள் இந்தியாவில் மட்டுமின்றி, உலகம் முழுவதும் புகழ்பெற்று விளங்குகின்றன. மேனாட்டு அறிஞர்கள் பலரும் அவரது புலமையையும் கவித்திறனையும் பாராட்டியுள்ளனர். உலக இலக்கிய வரலாற்றில் காளிதாசருக்கு மிக உயர்ந்த இடம் உள்ளது. காளிதாசர் செய்யுள் வடிவில் (சுலோகங்கள்) ரகுவம்சம், குமாரசம்பவம், மேகசந்தேசம், இருதுசம்ஹாரம் முதலான புகழ்பெற்ற காவியங்களைப் படைத்துள்ளார். மாளவிகாக்னிமித்திரம், விக்ரமஊர்வசியம், சாகுந்தலம் முதலான நாடகங்களைப் படைத்து நாடக ஆசிரியராகவும் திகழ்ந்தவர்.

இருது சம்ஹாரம் காளிதாசர் இளமையில் எழுதிய எளிமையான காவியமாகும். இதனால்தான் காளிதாசரின் ஏனையப் படைப்புக்களுக் கெல்லாம் உரையெழுதிய மல்லிநாதர் இக்காவியத்திற்கு உரையெழுதாமல் விட்டுவிட்டார். அணி இலக்கண ஆசிரியர்கள் இருது சம்ஹாரத்திலிருந்து எவ்வித மேற்கோள்களையும் எடுத்துக்காட்டவில்லை. காளிதாசர் இருது சம்ஹாரத்தை முதுவேனில் பருவத்தோடு தொடங்கியுள்ளார்; காளிதாசர் தமக்கெனத் தனித்தன்மை கொண்டவர் என்பதற்கு இதுவே சான்றாகும். காளிதாசருடைய காட்சித் திறனும் நடைச்சித்திரமும் இன்பரசமும் உவமைகளின் சிறப்புத்தன்மைகளும் கற்பனைப் போக்கும் கருத்தோட்டங்களும் கவிதா சக்தியும் இருது சம்ஹாரத்தில் பட்டை தீட்டாத வைடூரியம் போலக் காட்சி தருகின்றன.

'இருது சம்ஹாரம்' வெளிப்படுத்தும் கவிதையனுபவம்

காளிதாசர், பருவங்களை வருணிக்கும் ஒரேயொரு நோக்கத்தோடு 'இருது சம்ஹாரத்தைப்' படைத்துள்ளார். அக்காலப் புலவர்கள் பெண்களின் உருவத்தோற்றத்தை வருணிப்பதிலும், ஆண்கள் அவர்களைப் போகப் பொருளாக நுகர்வதிலும் ஈடுபட்டிருந்தனர். இத்தகைய காவியங்களைப் படித்து மகிழ்வதையே அக்கால மக்களும் விரும்பினர். இத்தகைய படைப்புக்களே சிறந்த இலக்கியங்களாகப் போற்றப்பட்டன. சிருங்காரச் சுவையையே மக்கள் பெரிதும் விரும்பியுள்ளனர். தற்காலத்தைப் போன்று உணவு, உடை, இருப்பிடம் ஆகியனவற்றுக்குத் திண்டாடாமல் மக்கள் செல்வச் செழிப்பில் வாழ்ந்துள்ளனர். செல்வச் செழிப்பை அவர்கள் சிருங்கார ரசத்தோடு அனுபவித்துள்ளனர். இதனால் காளிதாசர் உள்ளிட்ட அக்காலப் புலவர்கள் தாம் வழிபடும் பெண் தெய்வங்களைக் கூடப் பாதாதிகேசம் வரை வருணித்துள்ளனர்.

இனப்பெருக்கத்திற்காக இயற்கையைக் கையாளும் சாதனமாக

இதனைக் கருதலாம். வசந்தகாலத்தில் அழகும் பரபரப்பும் உடைய பெண்களின் அவயங்கள் ஏக்கத்தால் மெலிந்து வெளுத்ததாகவும், மதம் காரணமாகச் சோம்பல் கொண்டதாகவும், அடிக்கடி கொட்டாவி விடச் செய்வதாகவும் மன்மதன் செய்கின்றான். இதுவே பெண்களிடம் காமவேட்கை மிகுந்திருப்பதற்கான அடையாளம் என்கின்றார் காளிதாசர். பெண்களின் கண்கள், கன்னங்கள், மார்பகங்கள், நாபி ஆகிய உறுப்புக்கள் ஒவ்வொன்றையும் காணும் ஆண்களின் மனத்தில் காமவேட்கை தோன்றுவதால் மன்மதன் பெண்களின் உடலின் பல பாகங்களில் ஆட்சி செய்வதாகக் காளிதாசர் வருணித்துள்ளார்.

வசந்த இருதுவில் மன்மதன் பெண்களின் உடல் பாகங்களில் தூக்க மயக்கம் காரணமாக இன்பச் செயல்களைக் குறைக்கின்றான். மதுபானத்தால் பெண்களின் சொற்கள் குழறுகின்றன. கண் நோக்குகளைப் புருவ நெரிப்புடன் சிறிது வக்ரமாக்குகின்றான். காளிதாசர் காலத்தில் ஆண்பெண் இருபாலரும் மது உண்டு மயக்கம் கொண்டனர் எனக்கூறி, அரண்மனையின் சுகபோக வாழ்க்கையையும் ஆங்காங்கே வருணிக்கின்றார். வசந்த இருதுவில் மதத்தால் சோம்பல் கொண்ட பெண்கள் ஞாழல் விதை, காரகில், குங்குமப்பூ, கஸ்தூரி இவற்றுடன் கலந்த சந்தனத்தை தங்களின் வெண்ணிறமான மார்பகங்களில் பூசிக் கொள்கின்றனர். கடினமான ஆடைகளைக் களைந்துவிட்டு செந்நிறமானதும் மணமூட்டப்பெற்றதுமான மெல்லிய ஆடைகளை உடுத்திக் கொள்கின்றனர்.

வைகாசியில் பூக்கும் மல்லிகைக் கொடிகள் காண்போரின் உள்ளத்தில் ஆர்வத்தைத் தூண்டுகின்றன. தலைவன், தலைவியிடம் "அன்பே! மருதாணிப் பூங்கொத்துக்களின் சிறந்த அழகைக் காணும் எவர் உள்ளத்தில்தான் காதல் இன்பம் தோன்றாது" என்கின்றான். அழகிய பெண்களிடத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்த ஆண்களைக் குயிலோசை வருத்தமடையச் செய்கின்றது. கணவன்மார்களின் இல்லத்திலிருக்கும் மணமான பெண்களின் வினயமும் வெட்கமும் கூட வசந்த இருதுவில் குயிலின் இனிய கீதத்தாலும் வண்டுகளின் ஓசையினாலும் சஞ்சலம் அடைகின்றன. ஆடை அணிகலன்களோடு இன்ப உணர்வுபெற்ற பெண்கள் சித்திரை மாதத்தில் குயிலின் நாதத்தாலும் வண்டுகளின் ஓசையினாலும் தம் கணவன்மார்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்கின்றனர்.

காதலியைப் பிரிந்து வருந்தும் ஒரு வழிப்போக்கன், பூத்துள்ள மாமரங்களைக் கண்டதும் கண்களை மூடிக்கொள்கின்றான். சோகத்தில் கண்ணீர் விடுகின்றான். மா மலரின் வாசனை மூக்கில் ஏறாமல் தடுத்துக் கொள்கின்றான். வாய்விட்டுப் புலம்புகின்றான். இந்தச் சித்திரை மாதம்

களிப்புற்ற வண்டுகளின் ஓசையினாலும், பூத்த மாமரங்களாலும் கோங்கு மலர்களாலும் பெருமிதப் பெண்களின் மனத்தை மிகக் கூரிய அம்புகளால் குத்திக் காதல் உணர்வுகளைப் பலமாகத் தூண்டுகின்றன. மன்மதனுக்கு மாம்பூவே சிறந்த பாணம்; பலாச மலரே வில்; வண்டுகளின் கூட்டமே நாண் கயிறு; களங்கமற்ற சந்திரனே வெண் கொற்றக்குடை; தென்றல் காற்றே படையிலுள்ள யானைகள்; குயில்களே அவன் புகழ்பாடும் வந்திகன்; இத்தகைய பலம் கொண்ட மன்மதன், வசந்த இருதுவில் இயற்கையுடன் கூடி காம இன்பத்தைத் துய்க்க உதவுவான் என்று காளிதாசரின் வருணனை வசந்த இருதுவைச் சிறப்பிக்கின்றது. பெண் இன்பம் எத்துணைச் சிறப்புடையது என்பதை விளக்கவே காளிதாசர் வசந்த இருதுவை இறுதியில் வைத்துப் பாடியுள்ளார்.

இயற்கையின் ஐம்புல வாழ்க்கையை, மக்களிடத்து இயல்பாகத் தோன்றும் இன்ப வாழ்வின் பெருமையை, அதனால் உலக வாழ்க்கையை அழகும் சிறப்பும் கொண்டதாக ஆக்கலாமென்ற உணர்ச்சியை ஒரு தத்துவமாகக் கொண்டவர் காளிதாசர். இதுவே இருது சம்ஹாரத்தில் மறைந்து கிடக்கும் தத்துவமாகும். இது வாழ்வின் தொடக்கமாகும். உலகத்து இன்பங்களில் மகிழ்ச்சி கொள்ளல், ஐம்புலன் களையும் விரிவடையச் செய்து அதனால் வரும் அனுபவங்களைப் பெறுதல், உடம்பு என்னும் கோயிலின் அற்புதமான அழகைச் சுவைத்தல் என்னும் நிலைகளில் வசந்த இருதுவைப்பாடிய காளிதாசர் சிறந்த இயற்கைக் கவிஞராகத் திகழ்கின்றார் எனலாம்.

தமிழும் சமசுகிருதமும் தாக்கக் கொள்கை

தமிழுக்கும் சமசுகிருதத்திற்கும் இடையிலான இலக்கிய, இலக்கணத் தொடர்புகள் மிகவும் தொன்மையானதாகும். கி.மு. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பே இருமொழிக்கும் இடையே உறவுகள் இருந்துள்ளன. 'இந்தியா' என்னும் ஒரே தேசிய நிலப்பரப்பில் இவ்விரு மொழிகளும் வழங்கப்படுவதால் இவ்விருமொழிகளுக்கும் இடையிலான உறவுகள் இன்றளவும் தொடர்கின்றன. இன்றைய தமிழ் வழக்கிலும் எண்ணற்ற சமசுகிருதச் சொற்கள் பயின்று வருகின்றன. இதன் காரணமாக ஒரு மொழியின் தாக்கம் இன்னொரு மொழியில் ஏற்படுவது இயல்பாகின்றது. இது மொழித் தொடர்பியலில் இன்றியமையாததாகும். ஆதலால் சில இலக்கிய, இலக்கணக் கூறுகளிலும், ஒலியன், உருபன் முதலான மொழியியல் கூறுகளிலும் சமசுகிருதத்தின் தாக்கம் தமிழிலும், தமிழின் தாக்கம் சமசுகிருதத்திலும் ஏற்பட்டது.

சமசுகிருதமும் தமிழும் வெவ்வேறு மொழியாக இருந்தபோதும், இந்தியா என்னும் ஒரே நிலப்பரப்பில் தோன்றிய இவ்விருமொழி

இலக்கியங்களையும் ஒப்பிடும்போது சில ஒற்றுமைக் கூறுகளைக் காணமுடிகின்றது.

காளிதாசரின் இருதுசம்ஹாரம்

காளிதாசரின் 'இருதுசம்ஹாரம்' என்னும் நூல் பருவங்கள் குறித்த தன்னுணர்ச்சிச் சுலோகங்கள் அடங்கிய நூலாகும். இது காளிதாசரின் தொடக்க காலப் படைப்பாகும். ஆதலால் இந்நூலில் காளிதாசரின் கவித்துவம் குறைந்தே காணப்படுகின்றது.

"கிரேக்க இலக்கிய முல்லைப் பாடல்களில் காணப்பெறும் 'ஆயர்களின் நாட்காட்டி' (Shephered's Calender) விவரக் குறிப்புப் போலன்றிப் பருவக்காட்சிகளின் வருணனை மட்டுமே இருது சம்ஹாரத்தில் மிகுதியாகத் தென்படுகின்றது" என்கிறார் கி.ராசா (ஒப்பியல் நோக்கில் உலகச் செம்மொழி இலக்கியங்கள், (2010), ப.28). இருது சம்ஹாரத்தைப் போன்றே பருவ வருணனைகள் சங்க அகப்பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன. இவ்வருணனைகள் அகமாந்தர்களின் உணர்வு களுக்குப் பின்புலங்களாக அமைந்துள்ளன. பாலைத் திணைப் பாடல்களில் கோடைக்கால வருணனைகளும், முல்லைத் திணைப் பாடல்களில் கார்கால வருணனைகளும், குறிஞ்சித் திணைப் பாடல்களில் கூதிர்கால வருணனைகளும் காணப்படுவதை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம். சங்க அகப் பாடல்களில் பருவ வருணனைகள் அகமாந்தர் உணர்வுகளையும் மனநிலையையும் சூழல் உணர்வோடு காட்டுகின்றன. மேலும் அவற்றில் இயைபும் காணப்படுகின்றது.

"தன்னுணர்ச்சிப் பாடல் மரபு என்பது முதலில் தமிழிலும், அடுத்து மஹாராஷ்ட்ர பிராகிருத மொழியிலும், பின்னர் சமசுகிருதத்திலும் தோன்றி வளர்ந்துள்ளது" (காளிதாசர், சாகித்திய அகாதெமி, (1999), ப.25) என்று கே.கிருஷ்ணமூர்த்தி கூறியுள்ளார். ஆதலால் சங்க இலக்கியத்தின் தன்னுணர்ச்சிப் பாடல் மரபே, சமசுகிருதத்தில் பின்பற்றப்பட்டுள்ளதாகக் கருத இடமுள்ளது.

காளிதாசரின் இருது சம்ஹாரத்தில் காதலன் காதலி (தலைவன், தலைவி) கணவன் மனைவி ஆகிய அகமாந்தர்களின் காதல் சார்ந்த மனஉணர்வுகளுக்கு முதன்மை தரப்பட்டுள்ளன. இதற்குப் பின்புலமாக அமையும் பருவ வருணனைகள் முன்னிலைப் படுத்தப்பெற்றுள்ளன.

இருது சம்ஹாரம் - அமைப்பும் பகுப்பும்

சமசுகிருதத்தில் 'இருது' என்னும் சொல் பருவத்தைக் குறிக்கும். ஒரு வருடத்தை ஆறாகப் பிரித்து இ(ு மாதங்களை ஒரு ருதுவாக்கி (பருவம்), அப்பருவத்தின் சிறப்புக்களைப் பலவாறு வருணித்துள்ளார் காளிதாசர். 'இருது' என்பதற்குப் பருவம் எனவும், 'சம்ஹாரம்'

என்பதற்குத் 'தொகுப்பு' எனவும் பொருள் கொள்ளலாம். 'சம்ஹாரம்' என்னும் சமசுகிருதச் சொல்லிற்கு 'அழித்தல்' என்னும் பொருளும் உண்டு. இங்கு சம்ஹாரம் என்பதற்குப் 'பருவங்களின் தொகுப்பு' எனப்பொருள் கொள்ளப்படுகின்றது. காளிதாசர் ஆறு பருவங்களை 144 சுலோகங்களில் (செய்யுட்கள்) வருணித்துள்ளார்.

	சமசுகிருது இருதுக்கள் (பருவங்கள்)	காளிதாசர் பகுத்துள்ள இருதுக்கள்	தமிழ் மாதங்கள்	சுலோகங்களின் எண்ணிக்கை
1.	வசந்த இருது	இளவேனில் காலம்	சித்திரை, வைகாசி	28
2.	கிரீஸ்ம இருது	முதுவேனில் காலம்	ஆனி, ஆடி	28
3.	வர்ஷ இருது	கார் காலம்	ஆவணி, புரட்டாசி	28
4.	சரத் இருது	கூதிர் காலம்	ஐப்பசி, கார்த்திகை	26
5.	ஹேமந்த இருது	முன்பனிக் காலம்	மார்கழி, தை	18
6.	சிசிர இருது	பின்பனிக் காலம்	மாசி, பங்குனி	16
சுலோகங்களின் (செய்யுட்கள்) மொத்த எண்ணிக்கை				144

காளிதாசர் ஒவ்வொரு பருவத்தையும் பாடத் தொடங்கும்போது புறச் சூழலிலிருந்தே தொடங்குகின்றார். அதனைத் தொடர்ந்து மனித உணர்வுகளையும் பழக்க வழக்கங்களையும் இயற்கையோடு இணைத்துக் காட்டுகின்றார். ஆயினும், இருது சம்ஹாரத்தில் காளிதாசர் சிருங்காரச் சுவைக்கே முதன்மை தந்துள்ளார். அவர், பருவங்களை வருணிப்பதன் வாயிலாகச் சிருங்காரச் சுவையை நுணுக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

வடமொழியும் தமிழும்

சமசுகிருதத்தில் இன்பச்சுவை குறித்த பாடல்கள் பல உண்டு, அவற்றுள் சில தமிழின் அகப்பொருள் இலக்கண மரபோடு ஒத்துள்ளன. இருப்பினும் வடமொழியில் தமிழ் மொழியினைப் போல எவரும் அகமரபுகளை வகுத்துக் கூறவில்லை. பேராசிரியர் ச.வையாபுரிப்பிள்ளை, 'தமிழ் மொழி இலக்கிய வரலாறு' என்னும் தம் நூலில் 'தமிழில் காணலாகும் காதற்பாடல்கள் தனியுரிமை சான்றன அல்ல; அவை சமஸ்கிருதத்திலும் பண்டைக் காலம் தொட்டுக் காணப்படுகின்றன'

என்பதை (அ.ஆலிஸ், பிறமொழி இலக்கியங்களில் சங்க இலக்கியங்களின் தாக்கம் (2009), ப.82) என்ற தம் நூலில் எடுத்துக் காட்டியுள்ளார். தமிழின் அகப் பாடல்களைச் சமசுகிருதச் செவ்வியல் இலக்கியங்களோடு ஒப்பிட்டுக் காணும் முறை ஐரோப்பியர் வருகைக்குப் பின்னரே தீவிரமாகியது.

தமிழ் அகப்பாடல் மரபு

பரிபாடலில் குன்றம்பூதனார் என்னும் சங்கப் புலவர்,

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவர் கேண்மின் சிறந்தது
காதற் காமம் காமத்திற் சிறந்தது" (பரி. 15)

என நான்மறையாளர்களை விளித்துக் 'காதற் காமமே காமத்தில் சிறந்தது' எனக் கூறுவதையே தமிழ் அகப்பாடல் மரபாகக் கொள்ளலாம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் நானூற்று ஐம்பதுக்கும் மேற்பட்ட புலவர்களால் பாடப்பெற்ற சங்கப் பாடல்களில் 1862 பாடல்கள் அகப்பாடல்களாகும். இக்காதற் பாடல்கள் அகமாந்தர்களின் இயற்பெயர்களைக் குறிப்பிடாத நிலையில் தலைவன், தலைவி, தோழன், தோழி, செவிலி, நற்றாய் எனப் பொதுப்பெயர் சுட்டிக் கூறப்பெறும் இந்த அகப்பாடல்களின் காதல் வெளிப்பாட்டுச் செய்திகள் வாயிலாகத் தமிழர் அகவாழ்க்கையை, காதல் வாழ்க்கையைத் தெளிவுபட அறிந்து கொள்ள முடிகின்றது. இதனை,

"மக்கள் நுதலிய அகன்ஐந் திணையும்
சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்"

(தொல்.பொருள்.அகத்.51)

என்னும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாவினால் அறியமுடிகின்றது. மக்களது அகவாழ்க்கையைப் பாடுவதையே பொருளாகக் கொண்ட அகப்பாடல்களில் நடுவிலுள்ளதாகிய அன்பின் ஐந்திணைப் பாடல்களும் ஒருவரது இயற்பெயரைச் சுட்டிக் கூறாது. ஆயன், வெற்பன், ஊரன், சேர்ப்பன், விடலை போன்ற பொதுப்பெயர்கள் கொண்டே வரும். இதுவே சங்க அகப்பாடல்களின் மரபும் ஆகும்.

பருவங்கள்

தொல்காப்பியர் முதற்பொருளுள் நிலத்தையும் பொழுதுகளையும் அடக்கியுள்ளார்.

"முதலெனப்படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே"

(தொல்.பொருள்.அகத்.4)

திணைகளுக்குரிய பெரும்பொழுது, சிறுபொழுது ஆகிய பொழுதுகளையும் அவர் வரையறுத்துக் கூறியுள்ளார்.

"காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்" (தொல்.பொருள்.அகத்.6)

முல்லை:

கார்காலம் (பருவம்)	பெரும்பொழுது
மாலை	சிறுபொழுது
கார்காலம்	ஆவணி, புரட்டாசி
மாலை	முன்னிரவு

குறிஞ்சி:

கூதிர்காலம் (பருவம்)	பெரும்பொழுது
யாமம்	சிறுபொழுது
கூதிர்காலம்	ஐப்பசி, கார்த்திகை
யாமம்	நள்ளிரவு

"பனியெதிர் பருவமும் உரித்தென மொழிப"
(தொல்.பொருள்.அகத்.7)

குறிஞ்சித்திணைக்குத் தொல்காப்பியர் நான்கு மாதங்களைக் குறிப்பிட்டுள்ளார். முன்பனிப் பருவமே பனியெதிர் காலமாகும். இது மார்கழி, தை மாதங்களைக் குறிக்கும்.

மருதத் திணைப் பாடல்களுக்கு வைகறை, விடியல் ஆகிய இரண்டும் சிறுபொழுதுகள் ஆகும். நெய்தல் திணைப்பாடல்களில் 'எற்பாடு' என்னும் சாயுங்காலமே சிறுபொழுதாகும். பெரும்பொழுது வருணனைகள் மருதம், நெய்தல் திணைப்பாடல்களில் மிகுதியாக இடம்பெறாது என்பது தொல்காப்பியர் கருத்தாக உள்ளது. இதனை,

"வைகறை விடியல் மருதம்; எற்பாடு
நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்" (தொல்.பொருள்.அகத்.8)

என்னும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாவினால் அறிய முடிகின்றது. 'பொதுத்திணை' எனப்படும் பாலைத் திணைக்கு இளவேனில், முதுவேனில் ஆகிய வேனிற் பருவங்களும், நண்பகல் என்னும் சிறுபொழுதும் உரியது. இவ்வாறு அமையும் பாலைத் திணைப்பாடல்களின் புனைவே சுரவழியாகும். இதனை,

"நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு
முடிவுநிலை மருங்கின் முன்னிய நெறித்தே"
(தொல்.பொருள்.அகத்.9)

என்னும் தொல்காப்பிய அகத்திணையியல் நூற்பாவினால் அறிய முடிகின்றது.

இளவேனில் - சித்திரை, வைகாசி

முதுவேனில் - ஆனி, ஆடி மாதங்கள்

பாலைத் திணைப் பாடல்களுக்கு.

"பின்பனிதானும் உரித்தென மொழிப" (தொல்.பொருள்.அகத்.10)

எனக் கூறியுள்ளார் தொல்காப்பியர். மாசி, பங்குனி ஆகிய இரண்டு மாதங்களும் பின்பனிக்குரியன.

இவ்வாறு சங்க அகப்பாடல்களுக்குப் பருவங்கள் தெளிவாகத் தொல்காப்பியத்தில் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. இதற்கேற்பவே சங்க அகப்பாடல்கள் அமைந்துள்ளன. 'சங்க அகப்பொருள் இலக்கிய மரபு' என்று இதனையே குறிப்பிடுகின்றனர்.

சங்க மரபு

சங்க அகப்பாடல்களின் போக்கும் பொருண்மையும் ஒருசேர அகநிகழ்வுகள், இயற்கைப் புணர்ச்சியின் 'காட்சி' முதல், இல்லற வாழ்க்கையின் இறுதியான 'சிறந்தது பயிற்றல்' வரையில் களவு கற்பு என்னும் கைகோள்களில் அமையப் பெற்றனவாக உள்ளன.

இவ்வாறு வடமொழிப் படைப்பிலக்கியங்களில் அகவாழ்க்கையை முழுமையாகத் தெளிவுபடுத்தும் நூல்கள் இல்லை. களவு வழிப் படுத்தலும் இல்லை. ஆயினும், இல்லற ஏற்புநிலை வடமொழியார்க்கும் உரியதாக அறியப்படுகின்றது. ஆயினும் பத்துப்பாட்டில் வரும் 'குறிஞ்சிப்பாட்டு', 'முல்லைப்பாட்டு' போன்றன அகப்பாட்டு நூல்களில் காணப்படும் இறைச்சி, உள்ளுறை, உவமை, உருவகம் போன்றவை காளிதாசரின் இருது சம்ஹாரத்தில் காணப்படும் சுலோகங்களின் வருணனைகளோடு ஒத்துச் செல்கின்றன.

கார்காலத்தில் மேகம், இடி, மின்னல், மழை ஆகியனவற்றின் தொகுதியை முல்லைத் திணைப் பாடல்கள் வருணிக்கும் அதே போக்கினைக் காளிதாசரின் இருது சம்ஹாரத்திலும் காணமுடிகின்றது. சான்றாகக் குறிஞ்சிப்பாட்டில் காணப்பெறும் இடி,மேகம், மின்னல், மழை குறித்து,

"நிறையிரும் பௌவம் குறைபட முகந்துகொண்டு
அகலிரு வானத்து வீசுவளி கலாவலின்
முரசு அதிர்ந்தன்ன இருங்குரல் ஏற்றொடு
நிரைசெலல் நிவப்பின் கொண்மூ மயங்கி
இன்னிசை முரசின் சுடர்பூண் சேய்" (குறிஞ்சிப்பாட்டு, 47-51)

எனக் கூறப்பெற்றுள்ளது.

இருது சம்ஹாரம்

காளிதாசரின் 'இருது சம்ஹாரத்தில்', என் அன்பே, கார்ப்பருவம் வந்துற்றது.

"அரசனின் ஆடம்பரத்தோடும் முழுப்படைக் கவசத்தோடும்
கருமேகங்கள் அவனின் போர் யானைகள்
மின்னல்கள் அவனின் அரசு கொடிகள்
இடிகள் அவனின் முழங்கும் முரசுகள்" (இருது சம்ஹாரம், 2:1)

எனக் கார்கால வருணனை அமைந்துள்ளது. கார்காலம் வந்துவிட்டது. 'மேகம்' என்னும் யானை; 'மின்னல்' என்னும் கொடி 'இடியோசை' என்னும் மங்கல வாத்தியத்துடன் வர்ஷ இருது (கார்காலம்) பூமியை வலம்வரத் தொடங்கிவிட்டது என்பதுதான் இந்த சுலோகத்தின் பொருள். இதுபோன்றே சங்க இலக்கியத்திலும் குறிஞ்சி, முல்லைத் திணைப் பாடல்களில் மேகங்கள் கடல்நீரை முகந்து இடியை முழக்கி, மின்னலைப் பாய்ச்சி, மலை முகட்டைச் சார்ந்து மழை பொழியும் என இயற்கையழகு பரவலாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது.

இருது சம்ஹாரத்தில் கோடைக்கால வருணனைகள்

இருது சம்ஹாரத்தில் கோடைக்கால வருணனைகள், கோடைக்காலத்தின் கடும் வறட்சியையும், அதனால் உயிரினங்கள் படும் துயரங்களைப் பாடுவனவாகவும் அமைந்துள்ளன. சில சுலோகங்கள் காதலர்களின் உடல் வாட்டத்தினையும் எடுத்துக் காட்டுகின்றன.

"சூரியக் கதிர்களின் கடுங்கனலால் களைத்த
மயிலின் விரித்த இறகுகள் யாகத்தீயால் ஒளிவிட
படமெடுத்தாடும் பாம்பைக் கூடப்
பற்ற இயலாமல் வற்றிப் போயின" (இருது சம்ஹாரம், 1:6)

பாம்புக்குப் பகை மயில். ஆயினும், வெய்யிலின் உக்கிரம் தாங்காமல் பாம்பு முகத்தைக் கீழ்நோக்கிக் கவிழ்த்துக் கொண்டு சென்று மயில் தோகையின் நிழலில் தங்குகின்றது. அதாவது உயிர் பறிக்கும் பகைவரின் அருகிலேயே வெப்பத்தின் கொடுமை தாங்காமல் உயிரினங்கள் செல்கின்றனவாம். இவ்வாறு காளிதாசர் கோடைக் காலத்தின் கொடிய நிகழ்வுகளைச் சித்திரித்துக் காட்டியுள்ளார்.

இருது சம்ஹாரத்தில் உள்ளுறையும் இறைச்சியும்

சங்க அகப்பாடல்களில் அகமாந்தர்களின் மென்மையான காதலுணர்வுகள் உள்ளுறை, இறைச்சி போன்ற குறிப்புப் பொருள்களால் உணர்த்தப்படுகின்றன. இப்போக்கு இருது சம்ஹாரத்திலும் காணப்படுகின்றது. பொதுவாகத் தலைவியைப் பிரிந்து வினைவயிற் சென்ற தலைவனுக்கு அவன் வழியிடைக் காணும் உயிரினங்களின் அன்பு தழுவிய செயல்களும் வாழ்க்கையும் தலைவியை நினைவு படுத்தும். இது போன்றே இருது சம்ஹாரத்தில் அன்னப் பறவைகளின் அன்பு உணர்வைக் கண்ட தலைவனுக்குத் தன் தலைவியின் நினைவு தோன்றுகின்றது.

"காதலால் மயங்கித் துணையொடு திரியும்
கண்ணில் பட்ட அன்னங்கள் பிரிவால் வருந்தும்
அவன் உள்ளத்தைக் கசக்கிப் பிழிகின்றன"

(இருது சம்ஹாரம், 2:9)

குறியிடத்தில் தலைவி, தலைவனைச் சந்தித்தல்

தலைவி, தலைவனைக் காணக் குறியிடத்திற்கு வரச் சொல்வாள். இதற்குத் தொல்காப்பியத்தில் இலக்கணம் வகுத்துக் கூறப்பெற்றுள்ளது. ஆயினும், சங்க அகப்பாடல்களில் அதற்கான பாடல்கள் இல்லை. ஆனால், இருது சம்ஹாரத்தில் மின்னல் வெட்டும் அச்சத்திற்கு இடையே, தலைவனைக் காணத் துணிவுடன் வரும் தலைவியைக் காணமுடிகின்றது.

"மேகங்கள் இடியேறாக முழங்க முழங்க
உருவந் தெரியாத அந்த நள்ளிரவில்
காதலால் கவரப்பட்ட கன்னியர்கள்
குறியிடம் நோக்கி விரைகின்றார், அந்தோ!"

(இருது சம்ஹாரம், 2:10)

காளிதாசரின் வருணனையில் பெண்கள்

காதல் உணர்வு பொங்குவதால் துணைவரோடு கூடியிருக்கும் பெண்களின் மார்பகமும் தோள்களும் செயற்கை அழகினைப் பெறுவதாகக் காளிதாசர் வருணித்துள்ளார். ஹேமந்த இருது பருவத்தின் வருகையால் பெண்களின் செயற்கையழகு காதலனால் படப்போகும் துயரங்களைக் கண்டு கண்ணீர் வடிப்பதாக வருணித்துள்ளார். இதனைச் சங்க இலக்கியத்தில் குறிஞ்சிப் பாட்டில் காணமுடிகின்றது. காதலனோடு கூடியிருக்கும் காலத்தில் காதலியின் தோள்களும் மார்புகளும் செயற்கை அழகினைப் பெறுவதாகவும், தலைவனின் பிரிவின்போது அவர்களால் ஏற்படுத்தப்பட்ட செயற்கை அழகும் இயற்கையழகும் நீங்கிச் சென்றுவிடுவதால் பசலை படர்வதாகவும் தலைவியின் நிலையைக் காட்டுகின்றார் காளிதாசர்.

காளிதாசரின் படைப்புக்களில் சங்க அக இலக்கியச் சாயல்கள் பலவற்றைப் பரவலாகக் காணமுடிகின்றது. இருது சம்ஹாரத்தில் அதன் வருணனைக் கட்டமைப்பில் காளிதாசருக்குக் கைகொடுத்தது சங்க அகப்பாடல் மரபுகளோ என்னும் ஐயத்தைத் தோற்றுவிக்கின்றன.

இயற்கையைக் காதலர்களின் மன உணர்வுகளோடு இணைத்துக்காணும் சங்க மரபு, காளிதாசருக்கு முன்னர் வடமொழி இலக்கியங்களில் இல்லை. சங்க அகப்பாடல்கள் தோன்றிப் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரே கி.பி.நான்கு, ஐந்தாம் நூற்றாண்டுகளில் காளிதாசர் இலக்கியத்தைப் படைத்துள்ளார். இதற்கு வழிவகுத்துச்

சான்றளிப்பதைப் போன்றே சமசுகிருத இலக்கியத் திறனாய்வாளர்களின் ஆய்வுகளும் அமைந்துள்ளன. காளிதாசரின் பெண்கள் நாணம் முதலான பெண்மைக் குணங்கள் ஏதும் இல்லாமல் தங்களது வேட்கையைப் புலப்படுத்தி நிறைவு செய்து கொள்கின்றனர். ஆயினும் சங்க இலக்கியத் தலைவியர்கள், நாணத்தால் நிறையழிந்து நிற்பதுடன் தம் வேட்கையை மனத்துள்ளே புலம்பிக் கொள்வதுடன் நின்று விடுகின்றனர்.

காளிதாசர் வருணனைகளில் புதுமை

காளிதாசர் இருது சம்ஹாரத்தில் இரண்டாவது பருவமாகிய முதுவேனில் பருவத்தை முதலில் வருணிக்கின்றார். முதல் சருக்கத்தின் முதல் சுலோகம் தலைவன் தன் காதலியாகிய தலைவியிடம் கூறுவதைப் போல அமைந்துள்ளது.

கோடையின் வெப்பத்தால் துன்புறும் தம் கணவர்களுக்கு மனைவியர் தம் உடலின் உதவியால் வெப்பத்தைத் தணிவிக்கின்றனர். மனைவியர் தம் பாதங்களைச் செம்பஞ்சுக் குழம்பினால் சிவக்கச் செய்கின்றனர். காலில் அணிந்துள்ள சிலம்பின் ஒலி அன்னத்தின் ஒலியை ஒத்துள்ளது. அவ்வொலி கணவர்களைக் காமவேட்கை கொள்ளச் செய்கின்றது. பெண்கள் மார்பகங்களில் சந்தனத்தைப் பூசியுள்ளனர். இடைகளில் பொன் மேகலைகளை அணிந்துள்ளனர். கணவன் மார்களுடன் கூடி இன்புற்று நிலா முற்றத்தில் உணர்வற்று உறங்கிக் கொண்டிருந்த பெண்களின் முகத்தைக் கண்ட சந்திரன் விடியற் பொழுதில் ஒளிகுன்றியது.

“கருவுற்ற மாதர்களின் மார்பகம்போல் கருநிற மேகங்கள் சில உள்ளன” (புலவர் நாராயணவேலுப்பிள்ளை, காளிதாசரின் உலக மகாகாவியங்கள், 2009,ப.109)

> “இந்திர கோபப் பூச்சிகள் தரையில் ஊர்ந்து செல்வது பூமிப்பெண் பலநிற மணிகளைப் பூண்ட கட்டழகிபோலக் காட்சி தருகிறது”
>
> (மேலது, ப.109)
>
> “ஆறுகளில் புதுவெள்ளங்கள் வருவது பொதுமகளிர் போல”
>
> (மேலது,ப.109)

என்பன போன்ற உவமைகளைக் காளிதாசர் கையாண்டுள்ளார்.

மேகங்கள் கம்பீரமாக ஓசை செய்கின்றன. மின்னல்களும் கண்ணைப் பறிக்கின்றன. இதனால் அச்சுறுத்தப்பட்ட மாதர்கள் தம் கணவர்களோடு நெருக்கமாகப் படுத்து உறங்குகின்றனர். கார்காலத்தில் வருவதாகச் சொல்லிப் பிரிந்து சென்ற தலைவர்கள் வாராமையால் அவர்களின் மனைவியர் வருந்துகின்றனர். அவர்கள் அணிகலன், சந்தனம் முதலான மணப் பொருள்களை நீக்குகின்றனர். இடியும் மின்னலும் கொண்ட மேகமும் மேகலை, காதணிகளை அணிந்த

மகளிரும் தம்மைப் பிரிந்துசென்ற தலைவர்களின் கவனத்தை ஈர்க்கின்றனர். உறையூர் முதுகொற்றன் என்னும் சங்கப் புலவர் கார்காலத்தில் வருவதாகக் கூறித் தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் வாராமையால், அப்பருவத்தில் தலைவி தோழிக்குக் கூறுவதாகப் பாடியுள்ள குறுந்தொகையின் முல்லைப்பாடல், காளிதாசரின் தலைவர்களைப் பிரிந்த தலைவியரின் நிலையையே வெளிப்படுத்துகின்றது.

"அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத்து ஒழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறுபசு முகையே" (குறுந்.221)

என்பதே அப்பாடலாகும். கந்தரத்தனார் என்னும் சங்கப்புலவர், கார்ப் பருவத்தின் நிலையைக் கண்டு மனம் அழிந்து கூறுவதாக நற்றிணையின் பின்வரும் முல்லைத் திணைப் பாடலும், தலைவர்களைப் பிரிந்து கார்ப்பருவத்தில் துன்புறும் தலைவியர் நிலையைப் புலப்படுத்துவதாக அமைந்துள்ளது.

"வறம்கொல வீந்த கானத்துக் குறும்பூங்
கோதை மகளிர் குழூஉ நிரைகடுப்ப,
வண்டு வாய் திறப்ப விண்ட பிடவம்
மாலை அந்தி மாலதர் நண்ணிய
பருவம் செய்த கருவி மாமழை
'அவர் நிலை அறியுமோ ஈங்கு' என வருதல்
சான்றோர்ப் புரைவதோ அன்றே; மான்றுடன்
உரவுரு முரறும் நீரின், பரந்த
பாம்பு பைமழுங்கல் அன்றியும் மாண்ட
கனியா நெஞ்சத் தானும்,
இனிய அல்லநின் இடிநவில் குரலே" (நற்றி. 238)

இத்தகைய மழைக்காலத்தில் காளிதாசரின் மகளிர் கதம்பமலர், மகிழம்பூ, தாழம்பூ ஆகியனவற்றைத் தொடுத்துச் சூடிக்கொள்கின்றனர். மருத மலர்களும் அவர்களை அழகு செய்கின்றன. அகிலும் சந்தனமும் பூசப்பெற்ற பெண்கள் நறுமணமலர்களை அணிந்து இடியோசையைக் கேட்டு முன்னிரவில் தங்கள் கணவன்மார்களின் பள்ளியறைகளுக்குச் செல்கின்றனர். காளிதாசர் சரத் இருதுவை (குளிர்ப் பருவம் ஐப்பசி, கார்த்திகை மாதங்கள்) ஒரு மணப் பெண்ணாகவே உருவகம் செய்து பாடியுள்ளார். (புலவர் நாராயண வேலுப்பிள்ளை, காளிதாசரின் உலகமகா காவியங்கள், பக்.112-113).

காளிதாசரின் வருணனையில் சந்திரன் கணவனைப் பிரிந்திருக்கும் மனைவியர்க்கு அவர்களது உடல்களை விஷம் தோய்த்த பாணத்தால் மேலும் துன்புறுத்துவதாக அமைந்துள்ளது. இரவில் கணவர்களுடன் இன்பம் துய்த்த பெண்கள், காலை வேளையில் பிரிந்தபோது ஏக்கம் கொள்கின்றனர். முன்பனிப் பருவத்தில் (மார்கழி, தை) இன்பம் அனுபவித்ததால் பெண்கள் களைப்புறுகின்றனர். ஆயினும் அவர்கள் முகங்கள் வெளிறி மனம் மகிழ்கின்றது. அவர்கள் நகக்குறியும் பற்குறியும் தம் உடலில் பதிந்ததைப் பார்த்து உள்ளம் பூரிக்கின்றனர். ஆண்களால் இவ்வாறு பெண்கள் வருந்துவதைக் கண்டு ஏமாந்த இருது, பனித்துளி களாகிய கண்ணீரை வடிக்கின்றது. அது வைகறையில் வருந்துவதைப் போல்க் காணப்படுகிறது.

முன்பனிப் பருவத்தில் ஞாழல்கொடி குளிர்காற்றினால் ஓயாமல் அலைக்கப்பட்டு, கணவனைப் பிரிந்திருக்கும் பசலைபூத்த பெண் போல வெண்ணிறமடைந்துள்ளது. இப்பனிக் காலத்தில் தேனிலிருந்து தயாரிக்கப்பட்ட மதுவை உண்டு, காமம் துய்த்த காதலர்கள் பஞ்சணையில் உறங்குகின்றனர். பெண்கள் நகக்குறிகளையும் பற்குறிகளையும் கண்டு இறும்பூது எய்துகின்றனர்.

இந்த வருணனை சங்க அகப்பாடல்களில் இல்லாத ஒன்றாகும். இதனைக் காளிதாசர் வருணனையில் புதுமையானதாகக் கொள்ளலாம்.

ஹேமந்த இருது வருணனையில் இயற்கையையும் மக்களின் இயல்பையும் வருணித்த காளிதாசர் 'சிசிர இருது'வில் (மாசி, பங்குனி மாதங்கள்) பெண்களின் இயல்பையே முக்கியமானதாக வருணித்து உள்ளார். இரவில் கணவன் செய்த நகக்குறிகளையும் பற்குறிகளையும் கண்டு பெண்கள் மகிழ்ந்தவர்களாகச் சூரியன் உதிக்கின்ற நேரத்தில் தங்கள் முகத்திற்கு ஒப்பனை செய்து கொள்கின்றனர். வெல்லம், சர்க்கரை, கற்கண்டு முதலான பொருட்களை மிகுதியாகக் கொண்டதும், இனிய நெற்பயிர், கரும்பு ஆகியனவற்றால் அழகானதும், காதலர்களின் உடலின்பத்தை மிகுதியாகக் கொண்டதும், மன்மதனுக்குக் கர்வம் அளிப்பதுமான இந்தச் சிசிர இருது காதலர்களைப் பிரிந்தவர்களுக்குத் துன்பத்தைத் தருகின்றது.

பருவ காலங்கள் தென்னாட்டிற்கும் வடநாட்டிற்கும் சற்று மாறுபட்டனவாக உள்ளன. அரண்மனைகளிலும் பெருமாளிகைகளிலும் வாழும் உயர்குலப் பெண்களின் காமக் களியாட்டங்களையும் அவர்கள் மதுவுண்டு மகிழ்வதையும் காளிதாசர் வெளிப்படுத்தியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் அகமாந்தர்களின் காதலுணர்வு முதற்பொருள், கருப்பொருள் பின்புலங்களில் வெளிப்படுத்தப்படினும், அவை ஒரு பொது நிலையில் ஒன்றுபடுகின்றன. அரண்மனை வாழ்க்கை

அக்காலத்தில் காமக் களியாட்டங்களிலும், இன்பப் பொழுது போக்குகளிலும் சென்றது. வளங்கள் மிகுதியாகவும், மக்கள் தொகை குறைவாகவும் இருந்தன.

ஆதலால் சில இடங்களில் அகப்பொருள் வருணனைகளில் இருமொழி இலக்கியங்களுக்கும் சிறிது வேறுபாடு காணப்படுகின்றன.

முடிவுரை

சங்க அக இலக்கியப் பாடல்கள், பல புலவர்கள் திணைகளின் அடிப்படையில் பாடியனவாக உள்ளன. ஆயினும், அப்பாடல்கள் பருவங்களுக்கேற்ற காதலுணர்வுகளை இலக்கியச் சிறப்புக்களோடு வெளிப்படுத்துகின்றன. இவ்வாறே காளிதாசரின் இருது சம்ஹாரத்திலும் பருவங்களுக்கேற்பக் காதல் உணர்வுகள் புனையப் பெற்றுள்ளன. உலக இலக்கியங்கள் காதலுணர்வை வெளியிடுவதில் ஒன்றுபட்ட போதிலும், பண்பாட்டுப் பின்புலங்களில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

பக்தி இலக்கியத்தில் மகளிர்

முனைவர் சு.மலர்விழி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரி
மதுரை.

சென்ற இதழின் தொடர்ச்சி

கோதை என்கின்ற ஆண்டாள்

பக்தியால் முடியாதது எதுவும் இல்லை என்று சாதித்துக் காட்டியவர்தான் ஆண்டாள் நாச்சியார்.

வில்லிநகரத்தில் விஷ்ணுசித்தரின் மகளாக ஆடிப்பூரத்தில் துளசி வனத்தில் அவதரித்து அறிதுயிலும் மாதவனையே பதியாக அடைந்தவள். சிறுவயது முதல் தன் தந்தை பெரியாழ்வார் பாடும் பாசுரத்தையும் உலகளந்த மாயவன் லீலைகளையும் கேட்ட வண்ணம் வளர்ந்தவள். இறைவனுக்கு மாலை சூடி, 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி' என்று பெயர் பெற்றவள். திருப்பாவையை இயற்றி யதன்மூலம் பக்தியை வளரச் செய்தவள். இப்பாசுரங்கள் பக்தியை மட்டும் வளர்க்கவில்லை, இசைக் கலையையும் நாட்டியக் கலையையும் வளர்த்தன என்றால் அது மிகையாகாது.

இன்றும் மார்கழி மாதத்தில் ஆண்டாள் இயற்றிய திருப்பாவை பாடப்படுவதும், பல இசை மேடைகளிலும் நாட்டிய மேடைகளிலும் இப்பாடல்களைப் பாடி ஆடுவதும் நாம் இன்றும் கண்கூடப் பார்க்கும் நிகழ்வாகும்.

கண்ணனை ஆண்டாள் தன் கணவனாக நினைத்து இயற்றிப் பாடிய பாடல்கள் தமிழ் உலகத்தில் இன்றும் நிலையாக உள்ளன. அவற்றுள்

"வாரணமாயிரம் சூழவலம் செய்து
நாரண நம்பி நடக்கின்றான் என்றெதிர்
பூரண பொற்குடம் வைத்துப் புரம்எங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழி! நான்"

என்பதும் ஒன்று. மேலும்,

"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்

விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"

- என்ற பாடலும் சுவை மிகுந்த பாடலாகும்.

பக்தியோடு தமிழையும் வளர்த்த பெருமை ஒரு சிலரைத்தான் சாரும். அந்த வரிசையில் ஆண்டாள் நாச்சியாருக்குத் தனிஇடம் உண்டு என்பதை யாரும் மறுப்பதிற்கில்லை.

குறமகளிர் கொண்ட பக்தி

ஆழமான சுனையில் தோன்றி மலர்ந்த மணம் வீசும் மலர்களால் தொடுத்த கண்ணியை அணிந்து, அணையாகத் தொடுத்தமைந்த மாலையைக் கூந்தலிலே சூடிக் குல்லையின் இலையுடைய நறிய பூவையும் கடப்பம் பூவையும் பெரிய அழகிய தழையிடையே இட்டு மயில் போலும் மடப்பத்துடன் விளங்கும் குறமகளிரோடு வேலன் இணைந்து ஆடுவான் எனத் திருமுருகாற்றுப்படையில் நக்கீரர் கூறுவதிலிருந்து குறமகளிர் இறைவன் மீது கொண்ட பக்தி புலனாகின்றது.

அன்பினால் அழகைத் துறந்தவர்

சோழ நாட்டிலுள்ள காரைக்காலில் வைசியர் குலத்தில் வாழ்ந்த தனதத்தன் என்னும் வணிகப் பெருந்தகையின் மகள் புனிதவதி அம்மையார். உலக வாழ்விற்கும் ஞான வாழ்விற்கும் எடுத்துக்காட்டாய் வாழ்ந்த பெருமையினர். இவர் சிவபெருமான் மீது பக்தி கொண்டவர். இதனால் சிவபெருமானால் அம்மையே என அழைக்கப்பட்டவர். அதுமுதல் காரைக்கால் அம்மையாரானார். இறைவன் மீது கொள்ளும் பக்திக்கு இடையூறு ஏற்படுமோ என அஞ்சி தன்னைப் பேய்வடிவமாக மாற்றிக்கொண்டவர். சிவனிடம் கொண்ட பக்திமையால் பல நூல்களை அருளிச் செய்தவர். இவர் இறைவன் மீது பாடிய,

"பெறினும் பிறிதியாதும் வேண்டேன் நமக்கீது
உறினும் உறாதொழியு மேனும் – சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்"

எனும் பாடல் மூலம் இறைவன் மீது கொண்ட பத்திமை புலப்படும். தன் இறைபக்திக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் காரைக்கால் அம்மையார்.

பாவை நோன்பு நோற்கும் மகளிர்

பாவை நோன்பாவது புற நலனாம், உலக நலன் கருதியும் அகநலனாம் நற்கணவன் வாய்க்கப் பெறுவது கருதியும் மகளிரால் மார்கழி மாதத்தில் நோற்கப்படும் நோன்பு ஆகும்.

"வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்குச்
செய்யும் கிரியைகள் கேளீர்! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய்யுண்ணோம் பால் உண்ணோம் நாட்காலை நீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம்
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேலோர் எம்பாவாய்!"

எனப் பெரியாழ்வார் பெற்றெடுத்த ஆண்டாள் தான் இயற்றிய திருப்பாவையில் இரண்டாம் பாசுரத்தில் மகளிர் நோன்பு நோற்கும் விதிமுறைகளை விளக்குகின்றார். இவ்விதிமுறைகளைக் கடைப்பிடித்து மகளிர் நோன்பு நோற்று இறைவனை வழிபட்டதை மேற்கண்ட பாடலின் மூலம் அறியமுடிகின்றது.

தூது விடுத்துக் காதல் கொண்டமை

மதுரைச் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண்ணொருத்தி தன் காதல் நோயைச் சொக்கநாதரிடம் கூறுமாறு தமிழ்மொழியைத் தூதாக அனுப்புகிறாள். இதனை,

"பெண்பனையா யாக்கினையாற் பெண்களிலே காரைக்கால்
வண்பதியா ரெளவையெனெ வந்துதித்தாய் – நண்பார்
திலகவதி யாருடனே சென்மித்தாய் மாடக்
குலதவதியானத்தர் கூடல் – பலதவஞ்சேர்
மேனியார் கண்டிகையும் வெண்ணீறுங் கண்டுருகும்
மானியார் தேசிகனா வந்துதித்தாய் – ஞானியார்
துங்க மகவாகத் தோன்றி வனப்பகைக்குஞ்
சிங்கடிக்கும் தாதையாய்ச் சீர்செய்தாய் – இங்கு நீ
பெண்க ளெல்லாம் வாழப் பிறந்தமையில் என்மனத்தில்
புண்கள்எல்லா மாறப் புரிகண்டாய்..."

(தமிழ்விடுதூது, கண்ணி:102–106)

என்ற பாடல் வரிகள் உணர்த்தும். இதன் மூலம் இறைவன் காரைக்கால் அம்மையார் திலகவதியார் ஆகிய பெண்கள் நலம்பெறத் தோன்றிய நீ என் மனப்புண்ணும் ஆற அருள்புரிவாய் என்கிறார். மகளிருக்கு அருள்புரிந்ததையும் பெண்கள் இறைவன் மீது கொண்டுள்ள பக்தியையும் அறியலாம்.

அதிகாலை துயில் எழும் பெண்கள்

பாவை நோன்பு நோற்கத் திருப்பாவையில் அதிகாலையில் துயில் எழும் பெண்களைப் போலத் திருவெம்பாவையிலும் பெண்கள் அதிகாலையில் துயில் எழுந்து இறைவனைத் தொழுதது புலனாகின்றது. அவ்வாறு அதிகாலையில் துயில் எழாப் பெண்களை 'தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்' என்பதற்கேற்ப மற்றவர்களைத் தோழி துயில் எழுப்புவதைக் கீழ்வரும் பாடல் மூலம் அறியலாம்.

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவி தான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்"

ஒளிர்கின்ற நீண்ட கண்களை உடையவளே, தொடக்கமும் முடிவும் அற்றவனை, ஒளிவடிவானவனை நாங்கள் பாடுவது கேட்டும் உன்னால் எப்படித் துயில முடிகின்றது? நாங்கள் சொல்வது உன் காதில் விழவில்லையா? சிலம்பணிந்த இறைவனது பாதங்களை நாங்கள் பாடக்கேட்ட ஒருத்தி அவன் நினைவில் அப்பொழுதே மயக்கம் அமைந்தாள். அவளது நிலை அப்படி இருக்க, நீ இவ்வாறு துயில்கிறாய். எம் கண்களில் பாவை போன்றவளே, துயில் எழுவாயாக, என்று தோழியர் தத்தமக்குள் ஒருவரை ஒருவர் துயில் எழுப்புவதாக அமையப் பாடப்பட்டுள்ளது.

பொற்சுண்ணம் இடிக்கும் பெண்கள்

"வாள் தடங் கண்மட மங்கை நல்லீர்
வரிவளை களார்ப்பவண் கொங்கை பொங்கத்
தோள்திரு முண்டந் துதைந்திலங்கச்
சேரத்தெம்பி ரானென்று சொல்லிச் சொல்லி
நாட் கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே"

நீண்ட கண்ணுடைய பெண்களே, கையில் அணிந்துள்ள வளையல்கள் ஒலி எழுப்பச் செழுமையான மார்பகங்கள் விம்மியிருக்க, தோள்களும் நெற்றியும் திருநீறால் அழகுபெற, இறைவனது திருப்பெயரை இடைவிடாமல் உச்சரித்து, மலர்கள் அவன் பாதத்திற்கு ஒப்பாகவில்லையே என்று வெட்கம் கொள்கின்ற, நம்மை ஆட்கொண்ட இறைவனின் புகழைப் பாடி நாம் வாசனைப் பொடிகளை இடிப்போம் என்று பாடி ஆடுவதிலிருந்து பெண்கள் இறைவனுக்காகப் பொற்சுண்ணம் இடித்ததையும் அறியமுடிகின்றது.

முடிவுரை

இவ்வாறாகப் பக்தி இலக்கியங்களில் இடம்பெற்ற மகளிர் தாய்மைப்பண்பு கொண்டவர்களாகவும், இறைவன் மீது கொண்ட அன்பினால் பாவை நோன்பு நோற்றும், இறைவனிடமே தூது அனுப்பித் தம் காதலை (பக்தி) வெளிப்படுத்துபவர்களாகவும், நற்பண்புகளில் ஒன்றான அதிகாலையில் துயில் எழுதுதலும், மற்றவர்களையும் அப்பழக்கத்தில் ஈடுபடுத்துபவராகவும், இறைவனுக்காக முழு நேரப்பணி செய்பவராகவும் மகளிர் திகழ்ந்துள்ளமையை இக்கட்டுரையின் மூலம் அறியமுடிகின்றது.

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 2,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

திரு.வி.க.வின் தமிழ்க்கொடை ஈடு இணையற்றது

தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன்

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் கடந்த ஜன.26ந் தேதி நடைபெற்ற தமிழர் திருநாள் விழாவில், திரு.வி.க.வின் தமிழ்க் கொடை என்ற தலைப்பில் தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் அவர்கள் பேசினார்கள். அப்போது அவர் கூறியதாவது.

கடந்த நூறு ஆண்டுகளில் தமிழுக்குச் சேவை செய்தவர்களில் பாரதி, திரு.வி.க. இருவருக்கும் நிகர் வேறு யாருமில்லை. இன்றைய உரைநடை தமிழுக்கு இவர்கள் இருவரும் அடித்தள மிட்டார்கள் என்பது மட்டுமல்லாமல் புதிய பல சொற்களையும் சொற்றொடர்களையும் தந்து செழுமைப்படுத்தினார்கள்.

தமிழனைத் தமிழில் பேச வேண்டும் என்பதை வலியுறுத்தியவர் திருவிக. மணிப் பிரவாள நடையில் இருந்த தமிழை அனைவருக்கும் புரியும்படி எளிதாக்கினார். பொதுக்கூட்டங்களில் தலைவர்கள் அயல் மொழிகளில் பேசக்கூடாது. அப்படிப் பேசினால் அவர்களைப் பொதுமக்கள் திருத்தவேண்டும் என்று அறிவித்தார். பொதுமக்களின் வற்புறுத்தலால், ஆங்கிலத்தில் நாவன்மை காட்டி வந்த தலைவர்கள் அனைவரும் தமிழில் பேசத் தொடங்கினர்.

தமிழ்த் தென்றல் திருவிக.வின் பங்களிப்பு இதாயல், தொழிற்சங்கம், அரசியல், ஆன்மிகம் என 4 துறைகளில் விரிந்து பரந்தது. நவசக்தி, தேசபக்தன் ஆகிய இரு இதழ்களைத் தொடங்கினார். இதில் நவசக்தி சுதந்திரப் போராட்டக் கருத்துகளை எடுத்துச்சென்றது. தேசபக்தன், இறை மறுப்புக் கொள்கைக்கு பதிலடி கொடுப்பதற்காகவே தொடங்கப்பட்டது.

தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் அலைந்து திரிந்து, தொழிற்சங்கப் பணியாற்றினார் திரு.வி.க. 25 ஆண்டுகளுக்கும் மேலாக அவர் ஆற்றிய தொழிற்சங்கப்பணியின் விளைவாக தமிழகம் முழுவதும் பல தொழிற்சங்கங்கள் உருவாகின. அவரது தொழிற்சங்கப் பணிகளுக்கு வ.உ.சி., ராஜாஜி, ஜார்ஜ் ஜோசப் உள்ளிட்ட தலைவர்கள் பலர் துணை நின்றனர்.

சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் பாதையை ஏற்று இறுதி வரை உறுதியுடன் நின்றவர். மகாத்மா காந்தியை, அண்ணல் காந்தியடிகள் என்று அழைத்தவர் திரு.வி.க.தான். புரட்சி என்கிற வார்த்தை திரு.வி.க. தந்த தமிழ்க்கொடை. அரசியல், ஆன்மிகம் இரண்டையும் காந்தியடிகள் வழியில் ஒருங்கிணைந்து வாழந்தவர்.

பெரியார் ஈ.வே.ரா. அரசியல் ரீதியாக திரு.வி.க.வுடனும், ராஜாஜி யுடனும் கருத்துவேறுபாடு கொண்டிருந்தவர். ஆனால், இருவரது இறுதிச் சடங்கின்போதும் அவர் கண்கலங்கிய நிகழ்வு, அரசியல் மனமாச்சாரியங் களுக்கு அப்பாற்பட்டு அவர்களிடையே நிலவிய நட்பை வெளிப்படுத்து கிறது.

திரு.வி.க. மாநாடுகளில் ஆற்றிய உரைகளின் தொகுப்பு தமிழ்த் தென்றல் என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. அதுதான் அவருக்குத் தமிழ்த் தென்றல் என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. அதுதான் அவருக்குத் தமிழ்த்தென்றல் என்ற பெயரைப் பெற்றுத்தந்தது. இங்கிலாந்தில் சாமுவேல் ஜான்சன் தலைமையில் 18-ஆம் நூற்றாண்டில் இலக்கிய சங்கம் ஒன்று அடிக்கடி கூடி விவாதிக்கும். அதேபோல, ராயப்பேட்டையிலுள்ள திரு.வி.க.வின் சாது அச்சகத்தில் தமிழன்பர்களும் சைவ சித்தாந்திகளும் திரு.வி.க. தலைமையில் கூடி விவாதிப்பார்கள். மாணவர்கள், தொழிலாளர்கள் என்ற ஒரு மிகப்பெரிய கூட்டம் அவரைக் காணவும், பேசவும், ஐயப்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும் சாது அச்சகத்துக்குப் படையெடுப்பார்கள். திரு.வி.க. ராயப்பேட்டை முனிவர் என்று போற்றப்பட்டார்.

திரு.வி.க.வின் தமிழ்க் கொடையை தமிழ்ச் சமூகத்துக்கு நினைவூட்ட வேண்டியது அவசியம். அதை நான்காம் தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட தமிழ் அமைப்புகள் முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இவ்வாறு தினமணி ஆசிரியர் கே.வைத்தியநாதன் அவர்கள் கூறினார்கள்.

சங்கச் செய்திகள்

20.1.2016 அன்று செந்தமிழ் கலை மற்றும் ஓரியண்டல் கல்லூரியின் கணித் தமிழ் பேரவை தொடக்க விழா நடைபெற்றது. மதுரை நான்காம் தமிழ்ச் சங்கச் செயலாளர் திருமிகு ச.மாரியப்ப முரளி அவர்கள் தலைமை உரையாற்றினார்கள். முதல்வர் சு.விஜயன் அவர்களும், துணை முதல்வர் கி.வேணுகா அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள். சென்னை, தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் உதவி இயக்குநர் முனைவர் கா.உமாராஜ் அவர்கள் கணித்தமிழ் பேரவையைத் தொடங்கி வைத்து தொடக்க உரை ஆற்றினார்கள். கருமாத்தூர், புனித அருளானந்தர் கல்லூரி, கணித்தமிழ் சங்க உறுப்பினர் முனைவர் சாசலின் பிரிசில்டா அவர்கள் சிறப்புரையாற்றி கணித்தமிான் தேவை, பயன்பாடு குறித்து மாணவர்களுக்கு சிரிவாக எடுத்துரைத்தார்கள். கணித்தமிழ்ப் பேரவையின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் பா.நேருஜி வரவேற்றார். முனைவர் அ.நந்தினி அவர்கள் நன்றியுரை வழங்கினார். திரளான பேராசிரியர்களும் மாணவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

மதுரை நான்காம் தமிழ்ச் சங்கத்தில் 25.01.2016 அன்று முற்பகல் தமிழர் திருநாள் விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விழாவிற்கு மாட்சிமை தங்கிய முகவை மன்னர் நா.குமரன் சேதுபதி அவர்கள் தலைமை தாங்கினார்கள். விழாவில் தமிழக அரசின் தமிழ்த் தென்றல் திரு.வி.க. விருது பெற்ற தினமணி நாளிதழின் ஆசிரியர் திரு.கி. வைத்திய நாதன் அவர்களுக்குச் சிறப்பு செய்யப்பட்டது. முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்களும், சமூக நலத்திணக்க மருத்துவர் ந.சேதுராமன் அவர்களும் பாராட்டிப் பேசினார்கள். நிறைவாகத் திரு.வி.க.வின் தமிழ்க்கொடை என்ற பொருளில் திரு.வைத்தியநாதன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்கள். நகரப் பிரமுகர்களும், தமிழறிஞர்களும் திரளாகக் கலந்து கொண்டார்கள்.

தமிழ்ச் சங்க வளாகத்தில் செந்தமிழ்க் கல்லூரியில் வள்ளல் பொன்.பாண்டித் துரைத்தேவர் ஆய்வுக் கருத்தரங்கம் 29.1.2016 அன்று பிற்பகலில் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் முனைவர் பூ.பூங்கோதை அவர்கள் தலைமை தாங்கினார்கள். 'மணிமேகலையில் வாழ்வியல் மரபுகள்' என்ற பொருளில் முதுகலை முதலாம் ஆண்டு மாணவி செல்வி. ஐஸ்வர்யா ராணி, செல்வன். ப.பாலமுருகன் மற்றும் முதுகலை இரண்டாம் ஆண்டு மாணவர் செந்தில் கம்பராமாயணத்தில் மாந்தர் பண்புகள் என்ற பொருளில் கட்டுரை வழங்கினார்கள்.

தமிழ்ச் சங்க வளாகத்தில் 30.1.2016 அன்று இராமலிங்க அடிகள் நினைவேந்தல் நடைபெற்றது. முனைவர் மா.செல்வத்தரசி அவர்களும்

முனைவர் பா.நேருஜி அவர்களும் இராமலிங்க அடிகளாரின் தமிழ்ப்பணி குறித்து மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள். பேராசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

31.1.16 அன்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் அகிலன் அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர்கள் முனைவர் கோ.சுப்புலட்சுமி, முனைவர் மு.செந்தில்குமார் ஆகியோரும், மாணவர் வி.பாலமுருகனும் அகிலனின் தமிழ்ப்பணி குறித்து எடுத்துரைத் தார்கள். மாணவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

1.2.2016 அன்று மதுரை நான்காம் தமிழ்ச்சங்க வளாகத்தில் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களின் நினைவேந்தல் நடைபெற்றது. மாணவர்களும், பேராசிரியர்களும் திரளாகக் கலந்து கொண்டு அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். பேராசிரியர் முனைவர்.கி.வேணுகா, முனைவர் பூ.பூங்கோதை ஆகியோர் மீனாட்சி சுந்தரம்பிள்ளையின் தமிழ்ப்பணி குறித்து எடுத்துரைத்தார்கள்.

2.2.2016 அன்று மதுரை நான்காம் தமிழ்ச் சங்க வளாகத்தில் தமிழறிஞர்கள் நா.வானமாமலை மற்றும் மு.இராகவையங்கார் ஆகியோரின் நினைவேந்தல் நடைபெற்றது. பேராசிரியர்கள் முனைவர் மு.செந்தில்குமார், முனைவர் பி.ஆறுமுகம் ஆகியோர் அவர்களது தமிழ்ப்பணி குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைத்தார்.

3.2.2016 அன்று தமிழ்ச் சங்க வளாகத்தில் அறிஞர் அண்ணா, ஹெச்.ஏ.கிருட்டிணப் பிள்ளை ஆகியோரின் நினைவேந்தல் நடைபெற்றது. முதல்வர் முனைவர் சு.விஜயன், துணை முதல்வர் கி.வேணுகா ஆகியோர் தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி குறித்து மாணவர்களுக்கு விரிவாக எடுத்துக் கூறினார்கள்.

4.2.2016 அன்று மதுரைத் தமிழ்ச் சங்க வளாகத்தில் வீரமா முனிவர் நினைவேந்தல் நடைபெற்றது. உதவிப் பேராசிரியர் முனைவர் மா.செல்வத்தரசி, முனைவர் அ.நந்தினி, மாணவர் முத்துப்பாண்டி ஆகியோர் வீரமாமுனிவரின் தமிழ்ப்பணி குறித்து மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

12.2.2016 அன்று ஜி.யூ.போப் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. முனைவர் கி.வேணுகா, பூ.பூங்கோதை ஆகியோர் மாணவர்களிடையே போப் அவர்களின் தமிழ்ப்பணி குறித்து எடுத்துரைத்தார்கள். மாணவர்கள் திரளாகக் கலந்துகொண்டு தமிழறிஞர்கள் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

மார்ச் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

வள்ளத்தோள்
(மார்ச்.13)

வள்ளல் பொன்.
பாண்டித்துரைத் தேவர்
(மார்ச்.21)

ந.மு.வேங்கடசாமி நாட்டார்
(மார்ச்.28)

தமிழ் ஒளி
(மார்ச்.29)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. அ.அ.மணவாளன்
முனைவர் திரு. இராமசுந்தரம்
முனைவர் திரு. ம.திருமலை
முனைவர் திரு. இ.மறைமலை
முனைவர் திரு. பெ.சுயம்பு
முனைவர் திரு. செ.கந்தசாமி
முனைவர் திரு. முருகரத்தனம்
முனைவர் திரு. கு.வெ.பாலசுப்பிரமணியன்
முனைவர் திரு. மு.மணிவேல்
முனைவர் திரு. ம.பெ.சீனிவாசன்
முனைவர் திரு. இ.கி.ராமசாமி
முனைவர் திரு உ.கருப்பத்தேவன்

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ் கல்லூரி
மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன் முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி	**இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி** செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர், **செயலாளர்** மதுரைத் தமிழ்ச் சங்கம், 54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001.	From **THE SECRETARY** Madurai Tamilsangam 54, Tamil Sangam Road, Madurai - 625 001,TAMILNADU, INDIA

பெறுநர்/To, Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்**, காமராஜர்சாலை, மதுரை-625 009.